Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 176

வியாழக்கிழமை
21 மே 2026

வைகாசி 07 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் – 16
விலை – ரூபா 50



மீண்டும் போர் ஏற்படாதிருக்க

## அதிகாரப் பகிர்வு மிகவும் அவசியம்

### சுமந்திரன் வலியுறுத்து

மட்டக்களப்பு, மே 21
நாட்டில் இனிமேல் யுத்தம் ஏற்பட அனுமதிக்க மாட்டேன் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நேற்றும் தெரிவித்திருக்கின்றார். நாட்டில் மீண்டும் யுத்தம் ஏற்படக்கூடாது என்றால் அதற்கு அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு விரைந்து முன்னெடுக்கப்படவேண்டும் - இவ்வாறு நாடாளுமன்ற முன்னாள்

»15

திஸ்ஸ விகாரைக்காக

## அபகரிக்கப்பட்ட வீதி இன்று கட்டளை!

யாழ்ப்பாணம், மே 21
தையிட்டி திஸ்ஸ விகாரைக்காக ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பவானி வீதி தொடர்பில் மல்லாகம் நீதிமன்றம் இன்று கட்டளை வழங்கவுள்ளது.
தையிட்டி திஸ்ஸ விகாரைக்காக ஆக்கிரமிக்கப்பட்ட பவானி வீதியை அண்மையில் இடம்பெற்ற அளவீட்டுப் பணியின்போது தவிசாளர் சுகிர்தன் அடையாளம் காட்டியிருந்தார். இதையடுத்து அந்த வீதியை இடைமறித்து அமைக்கப்பட்டுள்ள எல்லையை

»15

## மே 18ஆம் திகதி என்பது இனப்படுகொலை நாளல்ல

### போர்வெற்றி நாளே என்று மாதுகொட எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, மே 21
மே மாதம் 18ஆம் திகதி என்பது போர்வெற்றி நாள் தான். இனப்படுகொலை நாளல்ல இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் சானக மாதுகொட தெரிவித்தார்.
நாடாளுமன்றத்தில் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:-

»15

உயிர்த்தஞாயிறுத் தாக்குதலின் பின்னர்

# சிறைக்குள் பிள்ளையானை சந்தித்தனர் ராஜபக்சக்கள்!

### சட்டமா அதிபர் நீதிமன்றத்தில் தெரிவிப்பு



கொழும்பு, மே 21
உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் பின்னர் மட்டக்களப்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த பிள்ளையானை மஹிந்த ராஜபக்ச, பஸில் ராஜபக்ச, நாமல் ராஜபக்ச ஆகியோர் சந்தித்துக் கலந்துரையாடல் நடத்தினார்கள் என்று சட்டமா அதிபரால் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

»15

எதிர்வரும் திங்களன்று

## வங்காள விரிகுடாவில் மேலடுக்குச் சுழற்சி?

யாழ்ப்பாணம், மே 21
வங்காள விரிகுடாவில் எதிர்வரும் திங்கட்கிழமை புதிய வளிமண்டல மேலடுக்குச் சுழற்சியொன்று உருவாகும் வாய்ப்புள்ளது என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதியும், வானிலை ஆய்வாளருமான பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா தெரி

»15

## சிவகங்கை 'பெயில்'

### கேள்விக்குறியாகும் சேவை

யாழ்ப்பாணம், மே 21
இயந்திரப் பழுது காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்த சிவகங்கை பயணிகள் கப்பலின் சோதனை ஓட்டம் தோல்வியில் முடிந்துள்ளது. இதனால் அந்தச் சேவையை மீள ஆரம்பிப்பது கேள்விக் குறியாகியுள்ளது. இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே

»15

## இந்து சகோதரர்களின் போர் மானிப்பாயில் நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 21
மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கும், சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கும் இடையிலான 'இந்து சகோதரர்களின் போர்' கிரிக்கெட் ஆட்டம் நாளை ஆரம்பமாகவுள்ளது.

»15

## விரிவுரையாளர் தயாளினி திலீபன் கழுத்து நெரிக்கப்பட்டே கொலை!

யாழ்ப்பாணம், மே 21
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் தயாளினி திலீபன் கழுத்து நெரிக்கப்பட்டே

»15



## இனப்படுகொலைக்கு நீதியை விரைவாக வழங்கவேண்டும் ஐ.நா.

### செல்வம் எம்.பி. வலியுறுத்து



கொழும்பு, மே 21
முள்ளிவாய்க்கால்இனப்படுகொலைக்கு மிக விரைவாக நீதி வழங்கப்படவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.
நாடாளுமன்றத்தில் நேற்று அவர் தெரிவித்ததாவது:-
முள்ளிவாய்க்கால்நினைவேந்தலை வைத்து மீண்டும் இனவாதம் பரப்பும் முயற்சிகளில் சிலர் ஈடுபட்டு வருகின்றனர். நாடாளுமன்றத்திலும் அத்தகைய இனவாதக் கருத்துகள் முன்வைக்கப்பட்டு வருகின்

»15



மக்களின் நிலைப்பாட்டை அறிய

## மாகாணத் தேர்தலை உடன் நடத்துங்கள்!

### பெரமுன வலியுறுத்து

கொழும்பு, மே 21
மக்களின் நிலைப்பாட்டை அறிவதற்கான ஜனநாயகப் பரீட்சையாக மாகாணசபைத் தேர்தல் விரைவில் நடத்தப்பட வேண்டும் - இவ்வாறு பொதுஜன பெரமுனவின் முக்கியஸ்தரும் முன்னாள் அமைச்சருமான இந்திக்க அனுருத்த தெரிவித்தார்.

»16

முச்சந்தி முனி

"சிறைக்குப் போய் சந்திக்கிற அளவுக்கு பிள்ளையான் ஏதோ அவைக்கு 'நல்லது' செய்திருக்கிறார் கண்டியளோ"

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**

| | |
|---|---|
| திகதி | 20.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4437 |
| ஆங்கில எழுத்து | F |
| வெற்றி இலக்கங்கள் | 03 21 31 72 |
| விசேட எழுத்து | F |

**ஹந்தஹண ராசி சுப பலன்**

| | |
|---|---|
| திகதி | 20.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1504 |
| வெற்றி இலக்கினம் | மேஷம் |
| வெற்றி இலக்கங்கள் | 17 25 38 50 |

**NLB ஜய**

| | |
|---|---|
| திகதி | 20.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0463 |
| ஆங்கில எழுத்து | P |
| வெற்றி இலக்கங்கள் | 3 3 8 3 |

**மெகா பவர்**

| | |
|---|---|
| திகதி | 20.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2543 |
| ஆங்கில எழுத்து | X |
| சுப்பர் இலக்கம் | 08 |
| வெற்றி இலக்கங்கள் | 05 10 25 40 |

**மஹஜன சம்பத**

| | |
|---|---|
| திகதி | 20.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6195 |
| ஆங்கில எழுத்து | G |
| வெற்றி இலக்கங்கள் | 0 3 9 0 6 2 |

**தன நிதானய**

| | |
|---|---|
| திகதி | 20.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2225 |
| ஆங்கில எழுத்து | Z |
| வெற்றி இலக்கங்கள் | 32 38 40 50 |
| விசேட எழுத்து | Z |

**சுப தவசக்**

| | |
|---|---|
| திகதி | 20.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0311 |
| வெற்றி இலக்கினம் | மிதுனம் |
| வெற்றி இலக்கங்கள் | 23 42 56 |

# தீவிரமடைகின்றது டெங்கு நடப்பாண்டில் 15 பேர் மரணம்!

கொழும்பு, மே 21

**இலங்கையில் நடப்பு ஆண்டில் இதுவரையான காலப்பகுதியில் 29 ஆயிரத்துக்கும் அதிகமான டெங்குத் தொற்றாளர்கள் பதிவாகியுள்ளதுடன், டெங்குத் தொற்றால் 15 பேர் மரணித்துள்ளனர் என தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.**

இதுகுறித்துத் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் சமூக மருத்துவ நிபுணர் பிரசீல சமரவீர தெரிவித்துள்ளதாவது-

நாடு முழுவதும் 39 சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகள் அதி அபாய வலயங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன. இலங்கையின் அனைத்து 25 மாவட்டங்களிலும் டெங்குத் தொற்றாளர்கள் பதிவாகியுள்ள போதும், சில குறிப்பிட்ட பகுதிகளில் இதன் தாக்கம் மிகத் தீவிரமாக உள்ளது. முதலிடத்தில் மேல் மாகாணமும் அடுத்தடுத்த இடங்களில் தென்மாகாணம் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களும் காணப்படுகின்றன. அண்மைய மழைக்கால நிலைவரத்தைக் கருத்திற்கொண்டு, பொதுமக்கள் வாராந்தம் தங்களின் வீடுகள், வீதிகள் மற்றும் பிள்ளைகள் செல்லும் பாடசாலைச் சூழலைச் சோதித்து, நீர் தேங்கி நிற்கும் இடங்களை உடனடியாக துப்புரவு செய்யவேண்டும் - என்றார். (ச-இ)

**சுபிரி தன சம்பத**

| | |
|---|---|
| திகதி | 20.05.2026 |
| தினம் | புதன்கிழமை |
| வெற்றி வாரம் | 0903 |
| ஆங்கில எழுத்து | D |
| வெற்றி இலக்கம் | 5 1 3 4 2 8 |

**Super Ball**

| | |
|---|---|
| திகதி | 20.05.2026 |
| தினம் | புதன்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 3169 |
| ஆங்கில எழுத்து | Y |
| வெற்றி இலக்கம் | 37 71 72 80 |

**சனிதா**

| | |
|---|---|
| திகதி | 20.05.2026 |
| தினம் | புதன்கிழமை |
| ஆங்கில எழுத்து | A |
| வெற்றி இலக்கம் | 06 42 55 59 |
| வெற்றி வாரம் | 5330 |

**SASIRI**

| | |
|---|---|
| திகதி | 20.05.2026 |
| தினம் | புதன்கிழமை |
| வெற்றி வாரம் | 0999 |
| வெற்றி இலக்கம் | 09 28 36 |

**லக்ன ராசி**

| | |
|---|---|
| திகதி | 20.05.2026 |
| தினம் | புதன்கிழமை |
| மகரம் | |
| வெற்றி இலக்கம் | 09 14 24 48 |
| சீட்டிழுப்பு வாரம் | 4881 |

**KAPRUKA**

| | |
|---|---|
| திகதி | 20.05.2026 |
| தினம் | புதன்கிழமை |
| ஆங்கில எழுத்து | C |
| சுப்பர் இலக்கம் | 27 |
| வெற்றி இலக்கம் | 35 42 65 68 |
| வெற்றி வாரம் | 2345 |

**அத கோடிபதி**

| | |
|---|---|
| திகதி | 20.05.2026 |
| தினம் | புதன்கிழமை |
| ஆங்கில எழுத்து | B |
| வெற்றி இலக்கம் | 18 19 48 56 |
| வெற்றி வாரம் | 2995 |



## குருதிக்கொடையளிப்பு வடக்குப் பின்தங்கல்!

யாழ்ப்பாணம், மே 21

இலங்கையின் ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடுகையில், வடக்கு மாகாணம் குருதிக் கொடையில் மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படுகிறது என யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் இரத்தவங்கிப் பிரிவு தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக யாழ். போதனா மருத்துவமனையின் இரத்தவங்கிப் பிரிவு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் நோயாளர்களின் தேவைகளுக்காகச் சேகரிக்கப்படும் குருதியின் அளவைவிட, தினசரி விநியோகிக்கப்படும் குருதியின் அளவு மிக அதிகமாகக் காணப்படுகிறது. இதன் காரணமாக, வடக்கு மாகாண நோயாளர்களின் உயிரைக் காப்பாற்றுவதற்காக, ஏனைய மாகாணங்களிலுள்ள இரத்த வங்கிகளிடம் இருந்தே தொடர்ச்சியாகக் குருதியைப் பெற்று வழங்கிச்சிகிச்சையளிக்கும் ஒரு துரதிர்ஷ்டவசமான நிலைமையே தற்போது காணப்படுகின்றது.

வடமாகாணத்தில் குருதித் தட்டுப்பாட்டை நீக்குவதற்காகப் பல்வேறு அமைப்புகள் மற்றும் நலன்விரும்பிகளால் அதிகளவிலான குருதிக்கொடை முகாம்கள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. எனினும் பொதுமக்களிடமிருந்து கிடைக்கும் ஒத்துழைப்பு மிகக் குறைவாகவே உள்ளது. பல முகாம்களில் 25க்கும் குறைவான கொடையாளர்களே வந்து குருதிக்கொடை செய்யும் ஏமாற்றகரமான நிலைமை நிலவுகிறது-என்றுள்ளது. (ச-66)

## போதையில் சாரத்தியம்; பேருந்துச் சாரதிகள் கைது

களுத்துறை, மே 21

பொதுப்போக்குவரத்து பேருந்துகளில் கடமையில் ஈடுபட்டிருந்த போது, போதைப்பொருள் பயன்படுத்தியிருந்த குற்றச்சாட்டின்கீழ் 8 பேருந்து சாரதிகளும் நடத்துநர் ஒருவரும் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

களுத்துறை தெற்கு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் முன்னெடுக்கப்பட்ட விசேட கூட்டு சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். களுத்துறை தெற்கு பொலிஸ் நிலைய அதிகாரிகளும், தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனமும் இணைந்து இந்த விசேட சோதனையை முன்னெடுத்திருந்தனர். (ச-இ)

## யாழில் கடந்த 5 மாதங்களில் 497 பேர் டெங்கால் பாதிப்பு!

### அடுத்தவாரத்தில் டெங்குக் கட்டுப்பாடு

யாழ்ப்பாணம், மே 21

யாழ்ப்பாணத்தில் கடந்த 5 மாதங்களில் டெங்கு நோயால் 497 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என மாவட்டச் செயலர் ம. பிரதீபன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல் யாழ்ப்பாண மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. அதில் அவர் தெரிவித்துள்ளதாவது-

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 2026ஆம் ஆண்டு மே மாதம் வரை டெங்கு நோயால் 497 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த இரு வருடங்களிலும் யாழ்ப்பாணத்தில் டெங்கு நோய் உயிரிழப்புகள் பதிவாகவில்லை. அதற்கு முந்திய வருடங்களிலும் பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை குறைவாகவே காணப்பட்டது. இனிவரும் காலங்களில் நோய்த் தாக்கம் அதிகரிக்காத வகையில் அதனைத் தடுப்பதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். தற்போது நாட்டில் பல பகுதிகளில் மழை பெய்து வருவதால் ஏற்படக்கூடிய டெங்கு நோய்ப் பரவல் தொடர்பில் கவனம் செலுத்தவேண்டும்.

டெங்கு விழிப்புணர்வு வாரத்தை எதிர்வரும் 25ஆம் திகதி தொடக்கம் 27ஆம் திகதி வரை கடைப்பிடிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, 25ஆம் திகதி பொதுமக்கள் சிரமதானத்தில் ஈடுபடுவது, 26ஆம் திகதி அரசாங்க அலுவலகங்கள், பாடசாலைகளிலும் 27ஆம் திகதி தனியார் வர்த்தக நிலையங்களிலும் கள ஆய்வுகள் மற்றும் சிரமதானம் மேற்கொள்வது என இதன்போது தீர்மானிக்கப்பட்டது - என்றார். (ச-66)



## 87 கைபேசிகளுடன் 3 சீனர்கள் கைது!

கொழும்பு, மே 21

உரிய இறக்குமதி ஆவணங்களின்றி சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் கடத்திவரப்பட்ட பெருமளவிலான அதிநவீன கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் பற்றரிகளுடன் மூன்று சீனப் பிரஜைகளை கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய சுங்க அதிகாரிகள் கைதுசெய்துள்ளனர். கைதுசெய்யப்பட்டவர்களில் சீனப் பெண் ஒருவரும், இரு ஆண்களும் அடங்குகின்றனர். இவர்களிடமிருந்து, 87 அதிநவீன கையடக்கத் தொலைபேசிகளும் 140 பற்றரிகளும் கைப்பற்றப்பட்டன. இவற்றின் மொத்தப் பெறுமதி சுமார் 5.14 மில்லியன் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேன் உற்பத்தியை அதிகரிக்க விவசாயத் திணைக்களம் திட்டம்

கொழும்பு, மே 21

**நாட்டின் வருடாந்த தேன் உற்பத்தியை 50 மெற்றிக் தொன்னிலிருந்து 200 மெற்றிக் தொன்னாக அதிகரிக்கும் நோக்கில் விசேட திட்டமொன்றை விவசாயத் திணைக்களம் ஆரம்பித்துள்ளது என்று அதன் பணிப்பாளர் நாயகம் கலாநிதி துஷார விக்ரமஆராச்சி தெரிவித்துள்ளார்.**

உலக தேனீக்கள் தினத்தை முன்னிட்டு நேற்றுமுன்தினம் பேராதனையிலிருந்து சஹஸ் உயனவரை நடத்தப்பட்ட தேனீ விழிப்புணர்வுப் பேரணியில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.


அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

நவீன தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்தி தேன் உற்பத்தியை விரைவாக விரிவுபடுத்துவதற்குத் திணைக்களம் திட்டமிட்டுள்ளது.

மனிதனின் தினசரி உணவில் மூன்றில் ஒரு பங்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தேனீக்களிலேயே தங்கியுள்ளது. உலகளாவிய விவசாய உற்பத்தியில் சுமார் 35 சதவீதமானவை தேனீக்களின் மகரந்தச்சேர்க்கை மூலமே நடைபெறுகின்றன.

தேனீக்கள் முற்றாக அழிந்து போகும் நிலை ஏற்பட்டால், உலகளாவிய ரீதியில் சுமார் 500 பில்லியன் அமெரிக்க டொலர் பொருளாதார இழப்பு ஏற்படுவதுடன், அது உலக உணவுப் பாதுகாப்புக்கும் கடுமையான அச்சுறுத்தலாக அமையும்-என்றார். (எ-இ)





## திருக்கேதீச்சரம் கொடியேற்றம் யாழிலிருந்து கொடிச்சீலை!

யாழ்ப்பாணம், மே 21

வரலாற்றுப் பிரசித்திபெற்ற மன்னார் திருக்கேதீச்சரம் ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழா இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. இதற்கான கொடிச்சீலை யாழ்ப்பாணத்தில் இருந்து திருக்கேதீச்சரம் ஆலயத்துக்கு நேற்றுக் காலை எடுத்துச்செல்லப்பட்டது.

திருக்கேதீச்சரம் ஆலயத்துக்கு பாரம்பரிய முறைப்படி கொடிச்சீலை வழங்கும் செங்குந்த மரபினரான திருநெல்வேலி கென்னடி வீதியிலுள்ள சண்முகநாதன் கபிலன் வீட்டிலிருந்து கொடிச்சீலை எடுத்துச் செல்லப்பட்டு திருநெல்வேலி வெள்ளைப்பிள்ளையார் ஆலயத்தில் வைக்கப்பட்டு அங்கு விசேடப் பூஜை வழிபாடுகள் நடைபெற்றன. அதனைத் தொடர்ந்து திருக்கேதீச்சரம் ஆலயத்துக்கு கொடிச்சீலை எடுத்துச் செல்லப்பட்டது. (ச-17)

## சுற்றுலாவிகளின் வருகை ஏப்ரல், மே மாதத்தில் சரிவு

கொழும்பு, மே 21

இந்த ஆண்டின் ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் நாளாந்த சுற்றுலாப் பயணிகளின் வருகை கணிசமான அளவில் வீழ்ச்சியடைந்துள்ளது என்று சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டில் இதுவரை 950,000க்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளனர். அவர்களுள் பெரும்பாலானோர் இந்திய நாட்டவர்களாவர்.

பிரித்தானியா, ரஷ்யா, ஜெர்மனி மற்றும் சீனா உள்ளிட்ட நாடுகளிலிருந்தும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகைதந்துள்ளனர் என்றும் அதிகார சபை தெரிவித்துள்ளது. (ச-இ)

## மருத்துவரை மிரட்டி ரூ.60 இலட்சம் பறிப்பு! தம்பதியர் கைது


கண்டி,மே 21

கண்டிப் பகுதியிலுள்ள தனியார் மருத்துவமனை ஒன்றில் பணியாற்றும் விசேட மருத்துவர் ஒருவரை மிரட்டி, 60 இலட்சம் ரூபாவுக்கு அதிகமான பணத்தைப் பெற்ற குற்றச்சாட்டில் 24 வயதுடைய தாதியர் ஒருவரும், அவரது கணவரும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். மருத்துவரின் முறைப்பாட்டுக்கமைய சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளின்படி, கைது செய்யப்பட்டுள்ள 24 வயதுடைய யுவதி, முன்னதாகக் கண்டியிலுள்ள குறித்த தனியார் மருத்துவமனையில் தாதியராகப் பணியாற்றியுள்ளார். அந்தக் காலப்பகுதியில் அங்கு கடமையாற்றும் விசேட மருத்துவருடன் அவர் மிகவும் நெருக்கமான தொடர்பைப் பேணி வந்துள்ளதாகத் தெரியவந்துள்ளது. பின்னர், அந்தப் பெண் மருத்துவருடன் தான் நெருக்கமாக இருந்த காலப்பகுதியில் எடுக்கப்பட்ட இரகசியப் புகைப்படங்களை வைத்து மிரட்டி சிறிதுசிறிதாக 60 இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான பணத்தைக் கணவருடன் இணைந்து பறித்துள்ளார் என்பது தெரியவந்துள்ளது. (ச-இ)

## பால்மா விலையேற்றம்!

கொழும்பு, மே 21



இலங்கையில் இறக்குமதி செய்யப்படும் பால்மாவின் விலைகளை அதிகரிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று பால்மா இறக்குமதியாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது. 400 கிராம் பால்மா பைக்கெற்றின் விலை 50 ரூபாவாலும், ஒரு கிலோகிராம் பால்மா பைக்கெற்றின் விலை 125 ரூபாவாலும் அதிகரிக்கப்படவுள்ளது. (ச-இ)




## முள்ளிவாய்க்காலில செய்யவேண்டியவை!

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில உந்த சோசல்மீடியாக்காரர் செய்த கூத்துகளை பட்சி நேற்றுச் சொன்னதெல்லோ. அந்த நினைவேந்தலில செய்யவேண்டிய இன்னும் சில விசயங்கள் நேற்று விடுபட்டுப் போட்டுது. அதை இண்டைக்குப் பாப்பம்.

வழக்கமா மாவீரர் நாள் எண்டால் சனங்கள் தாங்கள் இருக்கிற மாவட்டங்களில, அங்கையுள்ள துயிலுமில்லங்களுக்கு போய் அகவணக்கம் செலுத்தலாம். ஆனால், முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் அப்படியில்லை. அந்தந்த இடங்களில சின்னச் சின்னதால அஞ்சலியள் நடந் தாலும் எல்லாரும் எங்க இனவழிப்பு நடந்திச்சுதோ, எங்க எங்கட இனம் ஒரு சின்னச் சதுப்பு நிலத்துக்க வைச்சு வதைக்கப்பட்டிச்சோ, எங்க எங்கட கண்ணீரும் செந்நீரும் ஊறிப்போய்க் கிடக்குதோ அந்த முள்ளிவாய்க்காலுக்கு வந்து அஞ்சலி செலுத்தத்தான் மனசார நினைப்பினம். அதால மே 18 ஆம் திகதியெண்டால் வடக்கு, கிழக்கில இருந்து திரண்டு வந்து முள்ளிவாய்க்காலில தான் ஒன்றுகூடுகினம். ஒவ்வொரு வருசமும் முள்ளிவாய்க்காலுக்கு வாற சனங்களின்ர எண்ணிக்கை கூடிக்கொண்டு போறதால அடுத்தமுறை ஏற்பாட்டாளர்மார் சில முன்னேற்பாடுகளைக் கட்டாயம் செய்யோணும். அம்பாறை, மட்டக்களப்பு, மலையகம், கொழும்பு எண்டு தூர இடங்கள்ல இருந்து வர்ற எங்கட உறவுகள் வந்து இறங்கினதும் தங்களிட இயற்கைக்கடமைகளை முடிக்கவும், ஒரு பிளேன் ரீயைக் குடிச்சு ஆசுவாசப்படுத்தவும் ஒரு பொது இடவசதியை நாங்கள் செய்து குடுக்கோணும். ஏனெண்டால், நாங்கள் எப்பவுமே 'வந்தாரை வாழவைக்கும்' பெருநில மரபினர் கண்டியளோ!

முதலாவது விசயம், அங்கவாற வாகனங்களின்ர போக்குவரத்தை ஒழுங்குபடுத்திறதோட, அந்த வாகனங்களைப் பார்க் பண்ணுறதுக்கான சரியான முறையொண்டைக் கண்டுபிடிக்கோணும். முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் அண்டைக்கு வாகனங்களை ஒழுங்கா நிப்பாட்ட இடமில்லாமல் சனம் பட்டபாடு இருக்கே, அது பெரும் பாடு கரைத்துறைப்பற்று பிரதேச சபையினர் அடுத்த முறையாவது கொஞ்சம் முன்னேற்பாடா, வாகனங்களை 'பார்க்' பண்ணுறதுக்கு எண்டு ஒரு பெரிய இடத்தை ஒழுங்குபடுத்தோணும். அதோட, வாகனங்கள் வந்து போகமுடியாமல் றோட்டை அடைச்சுக் கொண்டு நிக்காமல் சீராப் போய்வாறதுக்கு ஒரு தொண்டர் படையை ஏற்பாட்டுக்குழு களத்தில இறக்க வேணும். ஏனெண்டால், இப்பிடி வாகன நெரிசலுக்க ஏதும் அசம்பாவிதம் நடந்தாலும், அதைச் சாட்டா வைச்சு அடுத்தமுறை முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கு பொலிஸ்காரர் நீதிமன்றுக்கு ஓடிப்போய் தடையுத்தரவு எடுத்திடுவினம். அதுக்கு நாங்கள் இடங்குடுக்காமல் எப்பிடி இந்த வாகன நெரிசலை இல்லாமல் செய்யிறதெண்டு யோசிக்க வேணும்.


அடுத்ததா நினைவேந்தலுக்குப் போன கனபேரின்ர மனசுக்குக் கஷ்டமா இருந்த ஒரு விசயம் என்னவெண்டால்அந்தப் புனிதமான இடத்தில ஐஸ்கிரீம், குளிர்பானங்கள் விக்கிறதும், நடமாடும் ஊதுபத்தி வியாபாரிகளும், யாசகம் கேக்குற ஆக்களும் தான். முள்ளிவாய்க்கால் நாளுக்காண்டி முல்லைத்தீவு, கிளிநொச்சி எண்டு முழுக்கக் கடைகளை மூடிட்டுச் சனம் துக்கத்தில கிடக்கேக்க, நினைவேந்தல் மையத்துக்குள்ள இப்பிடிச் 'சிறு வியாபாரங்களை'அனுமதிப்பது . அங்க உயிரிழந்த அந்த ஆன்மாக்களை அவமதிக்கிற மாதிரி இருக்கு . இது இப்படியே வளர்ந்தால் பிறகு தடுக்க ஏலாது. பிரதேசசபை இப்பவே இதுக்கு ஒரு 'ஆப்பு'வைக்கவேணும்.

கடைசியா ஒரு விசயம், இவ்வளவு பெரிய காரியத்தை ஏற்பாட்டுக் குழுவினர் மட்டும் தனியாச் செய்ய ஏலாது. நினைவேந்தல் முடிஞ்ச பிறகு அங்க கிடக்கிற குப்பைகளை அப்புறப்படுத்துறது, தூய்மை செய்றது போன்ற வேலைகளுக்கு எங்கட இளையவர்களைப் பழக்கவேணும். அஞ்சலி எண்டது வெறும் விளக்குக் கொளுத்துறது மட்டும் இல்லை. அந்த இடத்தை புனிதமாப் பராமரிக்கிறதுலயும் தான் இருக்கு. அடுத்த தலைமுறைக்கு இந்த மனிதவலுவைச் சரியா பகிர்ந்துகுடுத் தால் தான் எங்கட வரலாறு காலம் கடந்து நிக்கும் கண்டியளோ!

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சிறுபோக நெற்செய்கைக்கு யூரியா உரம் கொள்முதல்!



**கொழும்பு, மே 21**

**இந்த ஆண்டுக்கான சிறுபோக நெற்செய்கைக்குத் தேவையான மேலும் 15,000 மெற்றிக் தொன் யூரியா உரத்தை அரசாங்கத்தின் விவசாய சேவைக்குழுக்கள் மூலம் அவசரமாகக் கொள்முதல் செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.**

விவசாய, கால்நடை, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்ட விசேட முன்மொழிவுக்கு இந்த அனுமதி கிடைத்துள்ளது.

இம்முறை சிறுபோகத்தில் 550,000 ஹெக்ரேயர் வயல் நிலங்களில் பயிர்ச்செய்கை முன்னெடுக்கப்படும் என ஆரம்பத்தில் மதிப்பிடப்பட்டிருந்தது. எனினும், தற்போதைய காலநிலை மற்றும் சூழ்நிலைகளின்படி அது 450,000 முதல் 500,000 ஹெக்ரேயர் வரையில் அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிலப்பரப்புக்கான ஒட்டு மொத்த யூரியா உரத் தேவை சுமார் 75,000 மெற்றிக் தொன் என மதிப்பிடப்பட்டுள்ளது.

உள்நாட்டில் ஏற்கனவே கையிருப்பிலிருந்த உரங்களில் இருந்து இது வரையில் 48,297.87 மெற்றிக் தொன் உரம், விவசாய அபிவிருத்தித் திணைக்களத்தின் விவசாய சேவைக்குழுக்கள் மூலம் விவசாயிகளுக்கு விநியோகிக்கும் பணிகள் தடையின்றி நடைபெற்று வருகின்றன. தற்போது சிறுபோகத்தின் எஞ்சிய தேவைகளைப் பூர்த்தி செய்யவே மேலதிகமாக இந்த 15,000 மெற்றிக் தொன் உரம் கொள்முதல் செய்யப்படவுள்ளது. (ச-இ)

## உயிரிழந்த உறவுகளை நினைவுகூர சகல இனமக்களுக்கும் உரிமையுண்டு

### அரசாங்கம் தெரிவிப்பு



கொழும்பு, மே 21

கடந்த காலப் போரில் உயிரிழந்த தங்களின் உறவினர்களை எவ்விதத் தடையுமின்றி நினைவுகூருவதற்கான முழுமையான உரிமை சிங்கள, தமிழ், முஸ்லிம் உள்ளிட்ட சகல இன மக்களுக்கும் இருக்கிறது. அந்த ஜனநாயக உரிமையை எமது அரசாங்கம் உச்சக்கட்டமாகப் பாதுகாத்துக் கொடுத்துள்ளது என வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் சட்டத்தை நிலைநாட்டும் பொலிஸாரின் கடமைகளுக்கு இடையூறு விளைவிக்க எவருக்கும் உரிமை கிடையாது.

நாங்கள் எவரும் விரும்பாத ஒரு கொடிய யுத்தத்தை இந்த நாட்டில் சகல தரப்பினரும் எதிர்கொண்டோம். அந்த யுத்தத்தில் உயிரிழந்த, பாதிப்புக்குள்ளான மற்றும் அங்கவீனமுற்ற இராணுவத்தினர் உட்படப் பொதுமக்கள் சகலரையும் நினைவுகூர அவர்களின் உறவினர்களுக்கு உரிமை உண்டு. பெற்றோர், குழந்தைகள் அல்லது உறவினர்களை இழந்த சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் எவராக இருந்தாலும் தங்களின் நினைவேந்தல்களை அமைதியான முறையில் நடத்த முழுச் சுதந்திரமும் எமது ஆட்சியில் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது - என்றார். (ச-இ)

## இந்தியாவில் சீனி ஏற்றுமதித் தடை மாற்றுவழிக்கு இலங்கை ஏற்பாடு!

கொழும்பு, மே 21

கடந்த மே 15 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் சீனி ஏற்றுமதியைத் தற்காலிகமாக நிறுத்துவதற்கு இந்திய அரசு நடவடிக்கை எடுத்துள்ள நிலையில். இலங்கை ஏனைய நாடுகளிலிருந்து சீனியை இறக்குமதி செய்வதற்கான நடவடிக்கையில் தற்போது ஈடுபட்டுள்ளது.

இதுகுறித்து அத்தியாவசிய உணவுப் பொருள்கள் இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளதாவது-

இலங்கைக்குத் தேவையான சீனியில் பெரும்பகுதி இந்தியாவிலிருந்தே இறக்குமதி செய்யப்பட்டு வந்தது. எனினும், கடந்த மே 15 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் சீனி ஏற்றுமதியைத் தற்காலிகமாக நிறுத்துவதற்கு இந்திய அரசு அதிரடி நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தியாவின் இந்தத் ஏற்றுமதித் தடை வரவிருக்கும் செப்ரெம்பர் 30ஆம் திகதி வரை நீடிக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த திடீர் தடையின் காரணமாக, இலங்கை பிரேசில், தாய்லாந்து மற்றும் ஐரோப்பிய நாடுகளிலிருந்து சீனியை அவசரமாக இறக்குமதி செய்வது குறித்து தற்போது தீவிர கவனம் செலுத்தி வருகிறது.

அதேவேளை இந்தியாவின் ஏற்றுமதித் தடை தற்போதைய சீனி விலை அதிகரிப்புக்குக் காரணமல்ல. உள்நாட்டுச் சந்தையில் ரூபாவின் மதிப்புடன் ஒப்பிடுகையில் அமெரிக்க டொலரின் விலை அண்மைய நாள்களாக அதிகரித்துள்ளதன் காரணமாகவே சீனியின் விலையில் உள்நாட்டில் உயர்வு ஏற்பட்டுள்ளது - என்றுள்ளது. (ச-இ)


## அதிவேக வீதிகள் பராமரிப்பு; 5,180 மில்லியன் ரூபா செலவு!

### ரூ. 16,330 மில்லியன் வருமானம்!

கொழும்பு, மே 21

இலங்கையிலுள்ள அனைத்து அதிவேக நெடுஞ்சாலைகளினதும் வருடாந்த பராமரிப்புச் செலவு 5,180.90 மில்லியன் ரூபா எனப் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடக அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க எழுப்பிய வாய்மூலக் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். மொத்தமாக உள்ள 312.57 கி.மீ. தூரத்தைப் பராமரிக்க வருடாந்தம் 5,180.90 மில்லியன் ரூபா செலவிடப்படுகிறது. இதே வேளை, 2025ஆம் ஆண்டின் ஆரம்பம் முதல் 2025 டிசெம்பர் 31ஆம் திகதி வரையிலான காலப் பகுதியில் அனைத்து அதிவேக வீதிகளிலிருந்தும் மொத்த வருமானம் 16,330.14 மில்லியன் ரூபா கிடைக்கப்பெற்றுள்ளது என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். ச-இ)



தென்மராட்சி பிரதேச செயலக சிறுவர் உரிமை மேம்பாட்டு அலகினால் மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயத்தில் தரம் 10,11 மாணவர்களின் பெற்றோருக்கான விழிப்புணர்வு நிகழ்வு அண்மையில் பாடசாலை அதிபர் தலைமையில் நடத்தப்பட்டது. (ச-இ)

## இந்திய மீனவர்களின் அத்துமீறலை தமிழக முதல்வர் தடுக்கவேண்டும்!

### யாழ். மீனவர்கள் வலியுறுத்து

யாழ்ப்பாணம், மே 21

தற்போது இந்தியாவில் மீன்பிடித் தடைக்காலம் நடைமுறையில் உள்ளது. இந்தத் தடைக்காலம் வரும் ஜுன் 15 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளதால் தடைக்காலம் நீங்கியதும் இந்திய மீனவர்கள் மீண்டும் எமது கடற்பகுதிக்குள் அத்துமீறி நுழைவதைத் தடுக்கத் தமிழக புதிய முதல்வர் ஜோசப் விஜய் அவர்கள் உரிய சட்டபூர்வ நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று யாழ். மாவட்ட மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் உள்ள கடற்றொழிலாளர் கூட்டுறவு சமாசத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் யாழ்ப்பாண மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சம்மேளனப் பிரதிநிதி செல்லதுரை நற்குணம் தெரிவிக்கையில்,

தமிழ்நாட்டில் இருந்து எல்லை தாண்டி வரும் இந்திய இழுவை மடிப் படகுகளால் இலங்கையின் வட பகுதி மீனவர்கள் தங்களின் வாழ்வாதாரத்தை இழந்து தொடர்ச்சியாகப் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

எமது கடல் வளங்களை அழிப்பதுடன், எமது ஏழை மீனவர்களின் பல கோடி ரூபா பெறுமதியான மீன்பிடி வலைகளையும் இந்திய மீனவர்கள் அறுத்தெறிந்து நாசம் செய்துவிடுகிறார்கள்.

எனவே இந்திய மீனவர்கள் எமது கடற்பகுதிக்குள் அத்துமீறி நுழைவதைத் தடுக்கத் தமிழக புதிய முதல்வர் ஜோசப் விஜய் உரிய சட்டபூர்வ நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

அத்துடன் கச்சதீவு என்பது இலங்கையின் இறையாண்மைக்கு உட்பட்ட ஒரு சொத்து. தமிழக முதல்வராகப் பொறுப்பேற்றுள்ள ஜோசப் விஜய், தனது தேர்தல் காலக் கச்சத்தீவு மீட்பு வாக்குறுதியையும் கைவிடவேண்டும்- என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



# அநுரவின் அரசியல்..!

ஸ்ரீலங்கா இராணுவத்தினர் குறிப்பிட்ட ஓர் இனக்குழுமத்துக்கு எதிராகப் போராடவில்லை. மாறாகப் பிரிவினைவாதத்தைத் தோற்கடிக்கவே போராடினார்கள் என தெரிவித்துள்ளார் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க. வடக்கிலும், தெற்கிலும் அரசியல் இலாபம் தேடமுற்பட்டவர்களால் தான் பேரழிவை நாடு எதிர்கொள்ள நேர்ந்தது என்றும் அவர் கூறியுள்ளார். உள்ளதை உள்ளபடி பேசும் துணிவுள்ள தலைவராக ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி அநுர, ஆட்சியைத் தக்கவைக்க வேண்டிய தேவைகருதி தற்காப்பு அரசியலைச் செய்யமுற்படுகின்றார் என்பதை'போர் வீரர்கள்' நினைவு தினத்தில் அவர் ஆற்றிய உரையிலிருந்து தெளிவாக உணரவும் - அறியவும் முடிகின்றது. வடக்கில் முன்னெடுத்த அரசியல் இலாபம் கருதிய செயற்பாடுகளால் இந்தப் போர் இடம்பெற்றதா? தமிழர்கள் ஆயுதம் தூக்குவதற்கு என்ன காரணம்? என்பதை இதே தேசிய மக்கள் சக்தியினர் ஆட்சிக்கு வந்த புதிதில்நாடாளுமன்றத்தில் வெளிப்படையாக உணர்ந்திருந்தனர். அந்தப் புரிதலுக்கும், ஜனாதிபதியின் தற்கால உரைக்கும் இடையிலான வேறுபாடு மிகப்பெரியது.

சிங்கள- பௌத்த பேரினவாதத்தின் எல்லை மீறிய அடக்குமுறையை இனியும் பொறுத்துக் கொள்ள முடியாது என்ற கட்டத்திலேயே தமிழர்கள் ஆயுதம் தூக்கினார்கள். ஆயுதம் தூக்கினார்கள் என்பதை விடவும் அவர்களின் கைகளில் ஆயுதங்கள் திணிக்கப்பட்டன என்று கூறுவதே பொருத்தமாக இருக்கும். உண்மை இவ்வாறிருக்கையில், 'பொதுவான தவறுகளால்' இந்தப் போர் சம்பவித்து என்ற தோற்றப்பாட்டில் ஜனாதிபதி அநுர உரையாற்றியிருப்பது அபத்தத்தின் உச்சம். அதிலும், தமிழர்களின் வாக்குகளைப் பெருவாரியாகப் பெற்று ஆட்சிக் கதிரையில் அமர்ந்த ஜனாதிபதி அநுர, தமிழர்களுக்குச் சார்பாக நிற்காவிட்டாலும் உள்ளதை உள்ளபடி கூறும் திராணியற்றவராகத் தற்போது மாறியுள்ளமை இலங்கைத்தீவு இனி எக்காலத்திலும் இன நல்லிணக்கத்தை நோக்கிப் பயணிக்கப் போவதில்லை என்பதையே வெளிப்படுத்துகின்றது.

இலங்கையில் இனமோதல்களும், உள்நாட்டுப் போரும் ஏற்படுவதற்கு எவையெல்லாம் காரணமாக இருந்தனவோ அவையெல்லாம் தற்போதும் அதேயளவு உயிர்ப்புடன் உள்ளன. சிங்களத் திணிப்பு, பௌத்த மயமாக்கல், இனரீதியான பாகுபாடுகள் என்பன தற்போதும் முழுவீச்சில் இடம் பெற்று வருகின்றன. தையிட்டி திஸ்ஸ விகாரை தொடக்கம் கிழக்கில் உள்ள வழிபாட்டுத் தலங்கள் வரை ஏராளமான உதாரணங்கள் இதற்காகக் கொட்டிக் கிடக்கின்றன. இந்தத் தீவில் இனியொரு போர் இடம்பெறக்கூடாது என்றால், போருக்கான காரணங்களாக என்னவெல்லாம் இருந்தனவோ அவை அனைத்தும் முற்றாகக் களையப்பட வேண்டும். ஆனால், அந்த முயற்சிகளில் ஜனாதிபதி அநுர கடந்த ஓர் ஆண்டாகத் தோல்வி அடைந்துள்ளார் என்பதே கசப்பான உண்மை. ஆக, அநுரவின் ஆட்சியும், அவருடைய உரையும் அவரும் சாதாரண ஓர் சிங்களத் தலைவர் என்பதையே பட்டவர்த்தனம் செய்கின்றன.

இனப்படுகொலையில் கொல்லப்பட்டோரையும், மாவீரர்களையும் அஞ்சலிக்க அனுமதிப்பதால் அநுர மீட்பின் தூதுவர் எனப்பொருள் அல்ல. மன்னிப்புக் கோருவதும், மீள நிகழாமையை உறுதிப்படுத்துவதுமே அனைத்திலும் பிரதான விடயமாகும். சிங்களத் தலைவர்கள் இதுவரை செய்யமறுக்கும் கருமமும் அதுவே.


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com



## பொய்யாமொழி

**சொற்கோட்டம் இல்லது செப்பம் ஒருதலையா
உட்கோட்டம் இன்மை பெறின்**

**பொருள்:** உள்ளத்தில் கோணுதல் இல்லாத தன்மையை உறுதியாகப் பெற்றால், சொல்லினும் கோணுதல் இல்லா திருத்தல் நடுவுநிலைமையாம்.




# உள்நாட்டு உருளைக்கிழங்கு அரசாங்கத்தால் கொள்முதல்

## சதொசவூடாக விநியோகம்!

**கொழும்பு, மே 21**

**உள்நாட்டு உருளைக்கிழங்கு விவசாயிகளை இடைத்தரகர்களின் சுரண்டலில் இருந்து பாதுகாக்கவும், நுகர்வோருக்கு நியாயமான விலையில் உருளைக்கிழங்கை வழங்கவும், கூட்டுறவு மொத்த விற்பனைக் கூட்டுத்தாபனம் மூலம் நேரடியாகக் கொள்முதல் செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.**

விவசாய, கால்நடை, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் மற்றும் வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் ஆகியோரால் கூட்டாகச் சமர்ப்பிக்கப்பட்ட விசேட முன்மொழிவுக்கே இந்த அனுமதி கிடைத்துள்ளது. புதிய திட்டத்தின் படி, விவசாயிகளிடமிருந்து நேரடியாகக் கொள்முதல் செய்யப்படும் உருளைக்கிழங்குத் தொகைகள் அனைத்தும் 'லங்கா சதொச' நிறுவனத்திடம் ஒப்படைக்கப்படவுள்ளன. அங்கிருந்து சதொசவின் நாடு தழுவிய சில்லறை விற்பனை நிலையங்களின் ஊடாகப் பொது மக்களுக்குக் குறைந்த விலையில் விநியோகிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு நிலையான சந்தை வாய்ப்பை உறுதி செய்யவே அரசாங்கம் இந்த நேரடிக் கொள்முதல் அதிரடித் திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளது. (ச-இ)



## கரும்புகையை வெளியேற்றும் டீசல் வாகனங்கள்

கொழும்பு, மே 21

பரிசோதனைக்கு உட்படுத்தப்படும் டீசல் வாகனங்களில் 50 சதவீதமானவை அதிக கரும்புகையை வெளியேற்றுகின்றன என்று மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் தெரிவித்துள்ளது. இந்த ஆண்டில் இதுவரை சுமார் ஆயிரம் வாகனங்கள் பரிசோதிக்கப்பட்டுள்ளதுடன், 12 மாவட்டங்களில் விசேட பரிசோதனைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. அதிக கரும்புகை வெளியேற்றும் வாகனங்களுக்கு 14 நாள்கள் அவகாசம் வழங்கப்படுவதுடன், அத்தகைய வாகனங்கள் கருப்புப் பட்டியலில் சேர்க்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## கால்நடை கடத்திய லொறிக்குச் சூடு!

கொழும்பு, மே 21

சட்டவிரோதமாக கால்நடைகளை ஏற்றிச்சென்ற லொறி ஒன்றின் மீது பொலிஸார் துப்பாக்கிச்சூடு நடத்தி நால்வரைக் கைதுசெய்துள்ளனர். இந்தச் சம்பவம் ஹுங்கம, கட்டகடுவ பகுதியில் வைத்து நேற்று நடந்துள்ளது. பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் பொலிஸார் வீதித் தடை ஏற்படுத்தியிருந்த போதிலும், குறித்த லொறி தடையை மீறி தப்பிச் சென்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து, லொறியைப் பின்தொடர்ந்து சென்ற பொலிஸார் அதை நிறுத்த முயன்றபோதும் நிறுத்தப்படாததால் துப்பாக்கிச்சூடு நடத்தி லொறியை நிறுத்தியுள்ளனர். (ச-இ)



### சைபர் மோசடிகள்

## இருவாரங்களில் 311 பேர் கைது!

கொழும்பு, மே 21

மே மாதத்தின் முதல் இரண்டு வாரங்களில் மாத்திரம் கணினி மற்றும் மடிக் கணினியைப் பயன்படுத்தி நிதி மோசடி முன்னெடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் 311 வெளிநாட்டவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட வெளிநாட்டவர்களிடமிருந்து சைபர் குற்றங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டதாகக் கருதப்படும் நூற்றுக்கணக்கான மடிக் கணினிகள் மற்றும் கணினிகளும் 600 வரையிலான கைபேசிகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

சீனா, மலேசியா, இந்தியா, நேபாளம், வியட்நாம், தாய்லாந்து மற்றும் பெரு ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் இவ்வாறு சந்தேகத்தின் அடிப்படையில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் சுற்றுலா விசாவில் வருகைதந்து ஹோட்டல் அறைகள் மற்றும் வீடுகளை வாடகை அடிப்படையில் பெற்று இணையத்தினூடாக பெருந்தொகை நிதி மோசடி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளமை கணினி கட்டமைப்புகளினூடாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகப் பொலிஸ் தலைமையக உயர் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். (ச-இ)

**நாளை** வெள்ளிக்கிழமை- வைகாசி 08
22.05.2026
சுபநேரம் : 05.52 – 07.22
ராகுகாலம் : 10.22 – 11.52

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வடக்கில் கடந்த 10 வருடங்களில் 85,905 வெடிபொருள்கள் அகற்றம்!

## 'ஸார்ப்' நிறுவனம் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், மே 21**

**இலங்கையின் வடக்கு மாகாணத்தில் கடந்த 10 வருடங்களாக மேற்கொள்ளப்பட்டுவரும் மனிதாபிமானக் கண்ணிவெடி அகற்றும் பணிகளில், முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் இருந்து மாத்திரம் சுமார் 85 ஆயிரத்துக்கும் அதிகமான அபாயகரமான வெடிபொருள்கள் வெற்றிகரமாக அகற்றப்பட்டுள்ளதாக 'ஸார்ப்' நிறுவனம் அறிவித்துள்ளது.**

இதுகுறித்து அந்தநிறுவனத்தின் நடவடிக்கை முகாமையாளரான ஓய்வுபெற்ற கப்டன் பிரபாத் நாரம்பனவ ஊடகங்களுக்கு வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:-

ஜப்பான் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளின் நிதிப் பங்களிப்புடன் வடக்கு மாகாணத்தில் கண்ணிவெடி அகற்றும் பணிகளில் ஈடுபட்டு வரும் ஒரேயொரு உள்நாட்டு அரச சார்பற்ற நிறுவனமான ஸார்ப் 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் 2026 ஆம் ஆண்டு மே மாதம் வரையான காலப்பகுதியில் 38 இலட்சத்து 97 ஆயிரத்து 758 சதுரமீற்றர் பரப்பளவில் இருந்து 85ஆயிரத்து 905 அபாயகரமான வெடிபொருள்களை அகற்றியுள்ளது.

முல்லைத்தீவில் மாங்குளம், கொக்காவில், தச்சடம்பன், அம்பகாமம், ஒழுமடு மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகப் பிரிவுகள், கிளிநொச்சியில் முகமாலை, கிளாலி, இயக்கச்சி, ஆனையிறவு மற்றும் தட்டுவன்கொட்டி ஆகிய இடங்களிலும் யாழ். மாவட்டத்தில் கெற்பேலியிலும் இந்தப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன- என்றார்

இதேவேளை இந்தப் பணிகளின் முன்னேற்றங்களை நேரில் ஆராய்வதற்காக, இலங்கைக்கான ஜப்பானியத் தூதரகப் பிரதிநிதி குறுக்கோவா எறிக்கோ அண்மையில் மாங்குளத்திலுள்ள ஸார்ப் நிறுவனத்தின் பிரதான அலுவலகத்துக்கு வந்திருந்தார். (சு-55)

# விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், மே 21

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் தொழில்முறைத் தொடர்பாடலுக்கான ஆங்கில உயர் சான்றிதழ் கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இக்கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் 16வயதுக்கு மேற்பட்டவராக இருப்பதுடன் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படுகின்ற பொதுத் தொடர்பாடலுக்கான ஆங்கிலத்தில் அடிப்படைச் சான்றிதழ் கற்கைநெறியினைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்,இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படுகின்ற வணிக மற்றும் தொழில்முறைத் தொடர்பாடலுக்கான ஆங்கில உயர்சான்றிதழ் கற்கைநெறியின் மட்டம் ஒன்றினைப் பூர்த்தி செய்திருப்பதுடன் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் பொது ஆங்கிலத்தில் சாதாரண சித்தி அல்லது அதற்கு மேற்பட்ட சித்தியினைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் இக்கற்கைநெறிக்காக இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் தெரிவுப் பரீட்சையிலும் சித்தியடைந்திருக்க வேண்டும். விண்ணப்பப் படிவங்களை WWW.OU.AC.LK எனும் இணையத்தள முகவரியில் பிரவேசித்து எதிர்வரும் 29ஆம் திகதி வரை விண்ணப்பிக்க முடியும். மேலதிக விபரங்களுக்கு யாழ்ப்பாண பிராந்திய நிலையம் பிறவுண் வீதி கொக்குவில் எனும் முகவரியூடாகவும் மற்றும் 021 222 3374 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாகவும் தொடர்புகொண்டு விண்ணப்பிக்க முடியும் என யாழ்ப்பாண பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (எ-41)

*****

யாழ்ப்பாணம், மே 21

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் விசேட தேவைகள் சார் கல்வியியல் சிறப்புக் கல்விமாணி கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தக் கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் 18வயதுக்கு மேற்பட்டவராக இருப்பதுடன் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் டிப்ளோமா(மட்டம்3,4) அல்லது தேசிய கல்வியியற் கல்லூரியில் தேசிய கற்பித்தல் டிப்ளோமாவை(விசேட கல்வி) கொண்டிருக்கும் விண்ணப்பதாரிகள் 3ஆம் மற்றும் 4ஆம் நிலைகளுக்கான விலக்களிப்புடன் விசேட தேவைகள் சார் கல்வியில் சிறப்புக் கல்விமாணிப் பட்டப்படிப்பில் 5ஆம் நிலையில் இணைந்து 6ஆம் நிலை வரை கல்வியைத் தொடரமுடியும். விண்ணப்பிக்க விரும்புவோர் விண்ணப்ப படிவங்களை WWW.OU.AC.LK எனும் இணையத்தள முகவரியில் பிரவேசித்து எதிர்வரும் 31ஆம் திகதி வரை விண்ணப்பிக்க முடியும்.

மேலதிக விபரங்களுக்கு யாழ்ப்பாண பிராந்திய நிலையம் பிறவுண் வீதி கொக்குவில் எனும் முகவரியூடாகவும் மற்றும் 021222 3374 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாகவும் தொடர்புகொண்டு விண்ணப்பிக்க முடியும் என யாழ்ப்பாண பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (எ-41)

# வியட்நாம் நாட்டுத் திரைப்படம் திரையிடல்

யாழ்ப்பாணம், மே 21

யாழ்ப்பாணத் திரைப்படக்கழகத்தின் 30 ஆவது திரைப்படக் காட்சி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு பலாலி வீதியிலுள்ள வீனஸ் மருத்துவமனைக்கு அருகில் அமைந்துள்ள 'எங்கட புத்தகங்கள்' இல்லத்தில் நடைபெறவுள்ளது. இம்முறை உலகப் புகழ்பெற்ற வியட்நாமியத் திரைப்படமான 'வெள்ளை நிறப் பட்டு உடை' தமிழ் ரசிகர்களுக்காகத் திரையிடப்படவுள்ளது. வியட்நாம் நாட்டின் போர்க்காலப் பின்னணியையும், மக்களின் வாழ்வியலையும் தத்ரூபமாகச் சித்தரிக்கும் இந்தத் திரைப்படம் ஆங்கிலத் துணைத் தலைப்புகளுடன் திரையிடப்படவுள்ளது. இந்த இலவச திரையிடல் நிகழ்வில் திரைப்பட ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு யாழ்ப்பாணத் திரைப்படக்கழகம் அழைப்பு விடுத்துள்ளது. (ச-இ)

# குறிகட்டுவான்—நயினாதீவு படகுச்சேவை மட்டுப்பாடு

யாழ்ப்பாணம்,மே 21

தற்போது வீசும் கடும் காற்றுடனான காலநிலை காரணமாக குறிகாட்டுவான் - நயினாதீவு இடையேயான படகுச்சேவை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக வேலணைப் பிரதேச செயலாளர் தனபாலசிங்கம் அகிலன் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை அறிவித்துள்ளார். இதற்கமைய, நயினாதீவிலிருந்து குறிகாட்டுவானுக்கான இறுதிப் படகுச்சேவை மாலை 4 மணிக்கும், குறிகாட்டுவானிலிருந்து நயினாதீவுக்கான இறுதிப் படகுச் சேவை மாலை 5 மணிக்கும் இடம்பெறும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை, தற்போதைய கடும் காற்றுடனான காலநிலை காரணமாக குறிகாட்டுவான் - நயினாதீவு இடையேயான தனியார் படகுச்சேவை நேற்றுமுன்தினம் முதல் வழமையான அரை மணி நேரத்திலிருந்து ஒரு மணித்தியாலயத்துக்கு ஒரு தடவை என மாற்றப்பட்டுள்ளதாக நயினாதீவு தனியார் படகு உரிமையாளர் சங்கத்தினர் அறிவித்துள்ளனர். (ச-66)

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** மகிழ்ச்சியான நாளாக இருக்கும். ஆனால், எதிர்பாராத செலவுகள் அதிகரிக்கும். தேவையான பணம் கையில் இருப்பதால், உற்சாகமாகச் சமாளித்துவிடுவீர்கள். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**இடபம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். சிலருக்கு திடீர் பொருள் வரவுக்கு வாய்ப்பு உண்டு. வாழ்க்கைத்துணைவழி உறவுகளிடம் எதிர்பார்த்த காரியம்நல்லபடி முடியும். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும்.

**மிதுனம்:** இன்று எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சிலருக்குப் புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கும் யோகம் உண்டாகும். துணிச்சலாக சில முடிவுகளை எடுப்பீர்கள். சகோதர வகையில் சுபச் செலவுகள் ஏற்படக்கூடும்.

**கடகம்:** இன்று உற்சாகமாகக் காணப்படுவீர்கள். உறவினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பான சூழ்நிலை காணப்படும். சுபநிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படக்கூடும். தாய் வழி உறவுகளால் நன்மை உண்டாகும்.

**சிம்மம்:** தேவையான பணம் கையில் இருக்கும். காரியங்கள் முடிவதில் தாமதம் ஏற்பட்டாலும் முடித்துவிடுவீர்கள். இளைய சகோதரர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு உண்டாகும்.

**கன்னி:** குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதில் பெரியவர்களின் ஆலோசனை அவசியம். மாலையில் குடும்பத்துடன் உறவினர் வீட்டுக்குச் சென்று வருவீர்கள்.

**துலாம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உங்கள் முயற்சிகளுக்கு வாழ்க்கைத்துணை ஒத்துழைப்புத் தருவார்.

**விருச்சிகம்:** காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டாலும் முடிந்துவிடும். எதிர்பாராத வீண் செலவுகள் ஏற்பட வாய்ப்பு உண்டு. கணவன் - மனைவிக்கிடையே அனுசரித்துச் செல்வது நல்லது.

**தனுசு:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். ஆனால், திடீர்ச் செலவுகளால் கையிருப்புக் கரையும்.

**மகரம்:** சகோதரர்களுக்காக செலவு செய்யவேண்டி வரும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும்.

**கும்பம்:** அலுவலகத்தில் நீங்கள் எதிர்பார்த்த சலுகை இன்று கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. வியாபாரத்தில் பங்குதாரர்களால் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். என்றாலும் அதனால் பாதிப்பு இல்லை.

**மீனம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். வெளியூர்ப் பயணங்களைத் தவிர்ப்பது நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஈழத்தமிழ் மக்களுக்கு தமிழக ஆதரவு தேவை

## சட்டத்தரணி சுகாஷ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 21

ஈழத்தில் விஜயின் ரசிகர்கள் சீமானைத் தூற்ற வேண்டியதில்லை. சீமானின் ஆதரவாளர்கள் விஜயை எதிர்க்க வேண்டியதுமில்லை. ஈழத்தமிழர்களுக்கு இத்தருணத்தில் ஒட்டுமொத்தத் தமிழகத்தின் ஆதரவு தேவை என்பதை நினைவில் கொள்ளவேண்டும் என்று தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளரும், சட்டத்தரணியுமான க.சுகாஷ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

விஜயா? அல்லது சீமானா? இன்று ஈழத்தமிழர்களின் சமூக ஊடகப் பக்கங்களில் அதிகம் பேசப்படும் விடயம் இதுவே. தாம் விரும்பிய தலைவர்களுக்கு ஆதரவு தெரிவிப்பதாக ஆரம்பித்துத் தற்சமயம் மாற்றுத் தரப்பு மீதான வன்மத்தைக் கக்குவதாக நகர்கின்றது. இது உடனடியாகத் தவிர்க்கப்பட வேண்டும்.

தமிழகத் தலைவர்களுடன் தொடர்புகளும், உறவுகளும் இருப்பது தவறல்ல. அது தேவையானதும்கூட. ஈழத்தமிழினத்துக்கு தமிழகத்தின் ஆதரவு தவிர்க்க முடியாதது.

ஈழத்தமிழினத்தைக் கூறுபோடவும், எமக்கு நடந்த இனப்படுகொலையைத் திசைதிருப்பவும் இலங்கை அரசாங்கமும், அதன் முகவர்களும் திட்டமிட்டுக் காய்களை நகர்த்தி வருகிறார்கள். அதற்கு எமது இளைஞர்கள் பலிக்கடா ஆவதைத் தவிர்க்கவேண்டும் - என்றார்.

(ச-66)

# மத்தியஸ்தர் சபை அமர்வு பிற்போடல்

யாழ்ப்பாணம், மே 21

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த சாவகச்சேரி மத்தியஸ்தர் சபை அமர்வு எதிர்வரும் 31ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளது என்று சபையின் தவிசாளர் அறிவித்துள்ளார்.

பட்டதாரிகளின் ஆசிரியர் போட்டிப் பரீட்சை காரணமாக அன்றைய தினம் இந்தக் கூட்டம் நடைபெறமாட்டாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

(ச-9)


ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்



கடந்த 20.04.2026 திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர்

**ஐயாத்துரை இராசேந்திரம்**

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு **இன்று** (21.05.2026) வியாழக்கிழமை திவ்யமஹால் மண்டபத்தில் நடைபெறும் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அஞ்சலி நிகழ்விலும், மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தரவும்.**

**குடும்பத்தினர்**

**525/1 கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.**

(CS/61471) J-1

## மரண அறிவித்தல்



தோற்றம் 20 . 12 . 1951

மறைவு 19 . 05 . 2026

### நடராசா திருஞானசம்பந்தர்

(ஓய்வுநிலை மேலதிக அரசாங்க அதிபர்)

யாழ்ப்பாணம் அச்சுவேலி வளலாயை பிறப்பிடமாகவும், IRDP 3, பூங்கா வீதி, வவுனியாவினை வதிவிடமாகவும் கொண்ட ஓய்வுநிலை மேலதிக அரசாங்க அதிபர் நடராசா திருஞானசம்பந்தர் அவர்கள் கடந்த (19.05.2026) செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா - பூமணி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கந்தையா - பத்மாவதி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற விஜயலட்சுமி அவர்களின் அன்புக் கணவரும் கேதீஸ்வரன், வாசுகி, கௌரீஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், தனுஷா, துஷாந்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும், துருவன், ஆதிரன், ஆருஜன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (21.05.2026) வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் வவுனியாவில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பூந்தோட்டம் மின்மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

**இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.**

**தகவல்: குடும்பத்தினர்**

**IRDP 3, பூங்கா வீதி, வவுனியா**

**077 8148351, 077 8195083**

(CS/31830) J-1

## மரண அறிவித்தல்



தோற்றம் 25 . 05 . 1960

மறைவு 18 . 05 . 2026

### ஞானபாலசிங்கம் சந்திராதேவி

கோண்டாவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஞானபாலசிங்கம் சந்திராதேவி அவர்கள் கடந்த 18.05.2026 திங்கட்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிராசா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற ஞானபாலசிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான நடராசா - மனோன்மணி தம்பதியரின் அன்பு மருமகளும், தாரணி (அமெரிக்கா), யாழினி (ஜேர்மன்), திவாகரன் (பிரான்ஸ்), தாட்சாயினி ஆகியோரின் அன்பு தாயும், உதயராசா, இந்திரகுமார், யாழினி, திருக்குமார் ஆகியோரின் அன்பு மாமியாரும், ஶ்ரீராம், ராகவி, பிரணவி, அஜன், ஓவியா, மீரா, இனியா, அதிரன், விஸ்னுஜன், தனுராம், கோவர்த்தன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.05.2026) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கலைவாணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**கோகுல வீதி,**
**கோண்டாவில் வடக்கு,**
**கோண்டாவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**(Sunway)**

(CS 31826)A


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மன்னார் மாவட்ட மாதோ

## அருள்மிகு கௌரி அம்பிகை உடனுறை

# திருக்கொடியேற்றப் பெரு



### பராபவ ஆண்டு வைகாசித் திங்கள் 07ம் நாள் 21.05.2026 வியாழக்கிழ

சிவபூமி ஆகிய ஈழவளநாட்டிலே மூவர்முதலிகளும், மாணிக்கவாசக சுவாமிகளும், தெய்வச் சேக்கிழாரு
வழங்கப்பெற்ற சுவாமி. பின்பு கேதுபகவான் பூசித்து ஞானகாரகன் எனும் பதவி பெற்றமை கொண்டு "கே
விஸ்வகர்மாவின் வழித்தோன்றல்களாகிய மயன், மாந்தா, மகாதுஷ்டா, மண்டோதரி முதலியோர் அருள்
வினைகளைப் பொடியாக்கும் வன்னி விருட்சமும், இருபாலும்மேவ மகாலிங்கத் தலமாகிய இப்பெருங்கே

**இங்கே 2026ம் ஆண்டு வைகாசி விசாகாந்த மகோற்சவப் பெரு**
**நிகழத் திருவருள் கை**

**திருக்கொடியேற்றம்**
**21.02.2026**
**வியாழக்கிழமை**

**திருத்தேர்**
**29.05.2**
**வெள்ளிக்**

**பேரன்புடையீர் !**

வைகாசி 06ம் நாள் புதன்கிழமை (20.05.2026) பகல் அனுக்ஞை, விநாயகர் வழிபாடு (கணபதி ஹோமம்) மாலை கிராமசாந்தி,
கிரியைகள் நடைபெறும். மங்களகரமான பராபவ ஆண்டு வைகாசித் திங்கள் வியாழக்கிழமை 07ம் நாள் (21.05.2026) பூச நட்சத்திர
கௌரி அம்பிகை உடனுறை திருக்கேதீச்சரப்பெருமானுக்குத் திருக்கொடியேற்றப் பெருவிழா நடைபெறத் திருவருள் கைகூடியுள்ளது.

**கிரியாகால நி**

| நாள் | திகதி | கிழமை | திருவிழா | |
|---|---|---|---|---|
| வைகாசி 05 நாள் | 19.05.2026 | செவ்வாய் | திருநாவுக்கரசு நாயனார் திருவீதியைப் பார்வையிடும் விழா | திருப் |
| வைகாசி 06ம் நாள் | 20.05.2026 | புதன் | மகோற்சவ ஆரம்பக்கிரியைகள் | திருப் |
| வைகாசி 07ம் நாள் | 21.05.2026 | வியாழன் | முற்பகல் 10.15 - 11.45 மணி கொடியேற்றம், இரவுத் திருவிழா | திருப் |
| வைகாசி 08ம் நாள் | 22.05.2026 | வெள்ளி | பகல் திருவிழா, இரவுத் திருவிழா | யாழ். |
| வைகாசி 09ம் நாள் | 23.05.2026 | சனி | பகல் திருவிழா, இரவுத் திருவிழா | நாவ |
| வைகாசி 10ம் நாள் | 24.05.2026 | ஞாயிறு | பகல் திருவிழா, இரவுத் திருவிழா | பம்ப |
| வைகாசி 11ம் நாள் | 25.05.2026 | திங்கள் | பகல் திருவிழா, மாலை சரபமூர்த்தி விழா, இரவுத் திருவிழா | மகா |
| வைகாசி 12ம் நாள் | 26.05.2026 | செவ்வாய் | பகல் திருவிழா, மாலை பிச்சாடனர் திருவிழா, இரவுத் திருவிழா | யாழ். |
| வைகாசி 13ம் நாள் | 27.05.2026 | புதன் | பகல் திருவிழா, மாலை திருக்கல்யாணம், இரவுத் திருவிழா (தண்டிகை) | இரா |
| வைகாசி 14ம் நாள் | 28.05.2026 | வியாழன் | பகல் திருவிழா, இரவு பக்தோற்சவம் | மானி |
| வைகாசி 15ம் நாள் | 29.05.2026 | வெள்ளி | திருத்தேர் வீதி உலாத் திருவிழா, இரவுத் திருவிழா | திருப் |
| வைகாசி 16ம் நாள் | 30.05.2026 | சனி | தீர்த்தத் திருவிழா, இரவு கொடியிறக்கம் | திரு. |
| வைகாசி 17ம் நாள் | 31.05.2026 | ஞாயிற்று | மௌனத் திருவிழா | சுன் |
| வைகாசி 18ம் நாள் | 01.06.2026 | திங்கள் | பகல் உருத்திராபிடேகம், பஞ்சமுகார்ச்சனை, திருமுறையர்ச்சனை, இரவு சண்டிகேஸ்வரர் திருவிழா | சட்டத் |
| வைகாசி 19ம் நாள் | 02.06.2026 | செவ்வாய் | வைரவர் உற்சவம் - இரவு | இந்து |

**விழாக்கால பூஜை நேர ஒழுங்கு**

| நிகழ்வுகள் | காலை | தேர், தீர்த்தம் | மாலை |
|---|---|---|---|
| அபிஷேகம் | 6.00 மணி | 5.00 மணி | 3.00 மணி |
| மூலஸ்தான பூஜை | 7.35 மணி | 6.35 மணி | 4.30 மணி |
| ஸ்தம்பபூஜை | 8.30 மணி | 7.35 மணி | 6.00 மணி |
| வசந்தமண்டப பூஜை | 9.30 மணி | 8.30 மணி | 7.00 மணி |

**குறிப்பு : இயன்றளவு பால், தயிர், பழவகை பூசைக்குரிய ஏனைய**

**உற்சவ காலங்களில் அடியார்களுக்கு**
**திருவமுது (அன்னதானம்) வழங்கப்படும்.**

**கஜமுகன் ஹாட்வெயார் கட்டிடப்பொருட்கள்**
இல. 147, 149, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 2833


**ஜெய ஜெயராம் செரமிக்ஸ்**
இல. 154, 156, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 7120

**கந்தவேலன் றேடர்ஸ்**
இல.110, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 2822

**New Kamaal Ceramics (pvt)Ltd**
இல.37, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 2085

பரத
N


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தோட்ட சிவபூமி நன்னகர்

# றை திருக்கேதீச்சரநாதர் திருக்கோயில்

# பருவிழா (மகோற்சவம்)



## க்கிழமை தொடக்கம் 2026.05.20 சனிக்கிழமை வரை 10 திருநாட்கள்

கிழாரும் பன்னி ஆதரித்து ஏத்திப் பாடிய திருத்தலம் திருக்கேதீச்சரம். ஆதியிலே "வைத்தியநாதர்" என்று
ன்டு "கேதீச்சரர்" ஆகி அப்பெயரே ஆட்சி பெற்றுவிட்ட தலம் இதுவாகும்.
ர் அருள்பெற்ற தலம். பாவம். வினை தீர்க்கும் பாலாவிப் புண்ணிய தீர்த்தமும் வலம் வருவாரின் பாவம்.
ருங்கோயிலில் கௌரியம்மை உடனாக திருக்கேதீச்சரப்பெருமான் பிரியாமல் திடமாய் உறைகின்றார்.
**ப் பெருவிழா இன்று 21.05.2026 தொடக்கம் 30.05.2026 வரை**
**நள் கைகூடியுள்ளது.**

**தேர் பவனி**
**05.2026**
**னிக்கிழமை**

**தீர்த்தத் திருவிழா**
**30.05.2026**
**சனிக்கிழமை**


சாந்தி, வாஸ்துசாந்தி, திருமண் எடுத்தல் (மிருத்சங்கிரகணம்), அங்குரார்ப்பணம், ஆசாரிய இரட்சாபந்தனம். அதனைத் தொடர்ந்து அதிவாசக்
சத்திரமும் ஷஷ்டி திதியும் அமிர்தசித்த யோகமும் கூடிய முற்பகல் 10.15 மணிமுதல் - 11.45மணிவரை உள்ள கடக லக்கின நல்வேளையில்
து.

## ல நிகழ்வுகள்

| உபயகாரர்கள் |
|---|
| திருப்பணிச்சபை |
| திருப்பணிச்சபை |
| திருப்பணிச்சபை, திருகோணமலை மாவட்ட திருக்கேதீச்சர ஆயைத்திருவிழாச்சபை |
| யாழ். கல்வியியற்கல்லூரி கோப்பாய். வேலணை மத்திய மகா வித்தியாலயம். |
| நாவலர் மகாவித்தியாலயம், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். சித்திவிநாயகர் இந்து கல்லூரி, மன்னார். |
| பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி கொழும்பு - 04, வண்ணை - வைத்தீஸ்வரா வித்தியாலயம், யாழ்ப்பாணம், |
| மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பளை, அடம்பன் மத்திய மகா வித்தியாலயம், மன்னார்., கொக்குவில் இந்துக்கல்லூரி - யாழ்ப்பாணம். |
| யாழ். பத்திய கல்லூரி, யாழ்ப்பாணம். இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, கொழும்பு. கொழும்பு இரத்மலானை இந்துக்கல்லூரி. |
| இராமநாதன் கல்லூரி, சுன்னாகம், யாழ்ப்பாணம், திருப்பணிச்சபை, விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி, நீர்கொழும்பு |
| மானிப்பாய் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி |
| திருப்பணிச்சபை, மகா சிவராத்திரி மட பரிபாலனசபை திருக்கேதீச்சரம் |
| திரு. சி. திருநாவுக்கரசு குடும்பத்தினர், டூஃ7 4 ஹோட்டல் வீதி, கக் உரும்பிராய் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம். |
| சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி - யாழ்ப்பாணம். |
| சட்டத்தரணி பொ. கணபதிப்பிள்ளை குடும்பத்தினர், வடக்கு, உடுப்பிட்டி, திரு. சி. சிவலிங்கம், 12, அரசதொடர்மாடி, பம்பலப்பிட்டி, கொழும்பு - 04 |
| இந்து கற்கைகள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். |

**னைய திரவியப் பொருட்களை கேரில் வருபவர்கள் எடுத்து வருவது விரும்பத்தக்கது.**

ம்.



நன்றி

**திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச்சபை**
**தொலைபேசி எண்: 023-2050234, 023 2050800, 071 8671113,**
**0777 515 003, 071 689 3068, 077 668 5966, 076 6034900**

பரத் சேல்ஸ் & மோட்டோர்ஸ்
No.71, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
021 221 2747

இன்ப பிள்ளையார்
சைவ உணவகம்
பலாலி வீதி, கோண்டாவில், சந்தி,
யாழ்ப்பாணம்.

ஸ்ரீமுருகன் களஞ்சியம்
பல்பொருள் வாணிபம்
இல.941, கே.கே.எஸ் வீதி,
தட்டாதெரு சந்தி, யாழ்ப்பாணம்.
077 507 9765

சிறி நதியா நகை மாளிகை
இல.01, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 2709
இணை நிறுவனம்
சத்தியா ஜுவல்லர்ஸ்
021 222 1332

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பலாலி வடக்கு அ.த.க. பாடசாலை மல்யுத்தத்தில் 4 பதக்கங்கள்!



யாழ்ப்பாணம், மே 21

மல்யுத்தப்போட்டியில் பலாலி வடக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை 4 பதக்கங்களைக் கைப்பற்றி சாதனை படைத்துள்ளது.

வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்கள் பெண்களுக்கான மல்யுத்தப் போட்டிகள் கிளிநொச்சி மாவட்ட உள்ளக விளையாட்டரங்கில் அண்மையில் நடைபெற்றன.

இதில் பலாலி வடக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அணியினர் 16 வயது கீழ்ப் பிரிவு ஆண்களுக்கான போட்டியில்

ம. ருபிஷன், லி. வசீகரன் ஆகியோர் தங்கப்பதக்கங்களை, பா. அசோக்குமார் வெள்ளிப் பதக்கத்தையும் பெற்றுள்ளனர். அத்துடன் 18 வயது கீழ் பிரிவு பெண்களுக்கான போட்டியில் அ.அஜந்தினி தங்கப் பதக்கத்தையும் பெற்று ஒட்டுமொத்தமாக 3 தங்கப் பதக்கங்களையும் ஒரு வெள்ளிப் பதக்கத்தையும் பெற்றுள்ளனர். (ச)


## INVITATION FOR BID 2026/03
## VALIKAMAM SOUTH WEST PRADESHIYA SABHA MANIPAY.

1. The Chairman, Local Authority Procurement Committee, on behalf of the Valikamam South West Pradeshiya Sabha, Manipay invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the projects will be funded via Stamp Duty, Dithwa 1250Mn & council.
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of highway & Building construction for grade mentioned in the table below.
   "Bidders shall also register themselves with the Registrar of Public Contracts, Sri Lanka, in terms of the public Contract Act No 03. of 1987. The original certificate of registration (PCA 03) shall be submitted with the bid."
4. Qualification' requirements are indicated in section 4 of the Procurement document. Additional details are provided in the Bidding Data & Contract Data (Section 5) for SBD 3 Documents (Works specified in Table below)
5. Interested bidders may obtain further information from address given below in 6 and inspect the Procurement documents at the same place on any working days from 2026-05-21 To 2026-06.03 during 09:00 A.M to 15:00 P.M.
6. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Chairman, Valikamam South West Pradeshiya Sabha, Manipay (T.P:021-2256647, E.mail: vswps@yahoo.Com) from 09:00 A.M to 15:00 P.M. During the period stated in table below upon payment of non-refundable fees as mentioned in the table below. The method of payment will be by cash.
7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the Chairman, Local Authority Procurement Committee, Valikamam South west Pradeshiya Sabha, Manipay on or before as stated in table below. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Pre-Bid Conference will be held at Conference Hall, Valikamam south west Pradeshiya Sabha, Manipay as stated in table below.
9. Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft as per the information given in the Tables.

| | |
|---|---|
| Document Issuing/Purchasing Period | From 2026.05.21 To 2026.06.03 |
| Pre-Bid Conference | At 10.30 A.M on 2026.05.29 |
| Closing and Opening of Bids | At 2.30 P.M on 2026.06.04 |

| Bid ID | Description of Work | Fund | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fee (Rs.) | Required Bid Security/ Bank Draft/ Security Deposit: Security Amount (Rs.) | Required Bid Security/ Bank Draft/ Security Deposit: Validity Period | Bid Validity Period |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| NP/14/41(16)/ W/SD/2026/01 | Construction of Looththu Kevi Road | Stamp Duty | 6.61 | 60 | C8 or Above (Highway) | 3,500.00 | 66,100.00 | 16.09.2026 | 19.08.2026 |
| NP/14/41(16)/ W/SD/2026/02 | 01.Reconstruction of Uttrukkuli Road Navaly North<br>02. Reconstruction of Moonamalai Road, Suthumalai | Stamp Duty | 5.50 | 60 | C8 or Above (Highway) | 3,500.00 | 55,000.00 | 16.09.2026 | 19.08.2026 |
| NP/14/41(16)/ W/SD/2026/03 | Construction of Dutch Road 3rd Branch Periyavilan | Stamp Duty | 2.05 | 60 | C9 or Above (Highway) | 3,500.00 | 20,500.00 | 19.08.2026 | 22.07.2026 |
| NP/14/41(16)/ W/SD/2026/04 | Reconstruction of Pandatharippu Hospital Road. | Stamp Duty | 1.69 | 60 | C9 or Above (Highway) | 3,500.00 | 17,000.00 | 19.08.2026 | 22.07.2026 |
| NP/14/41(16)/ W/Dithwa/2026 /01 | Reconstruction of Kaakaitheevu Cemetry Road | Dithwa 1250Mn | 2.71 | 60 | C9 or Above (Highway) | 3,500.00 | 27,500.00 | 19.08.2026 | 22.07.2026 |
| NP/14/41(16)/C F/2026/06 | Repairing of Slaughter House Pandatharippu | Council | 2.10 | 60 | C9 or Above (Building) | 3,500.00 | 21,000.00 | 19.08.2026 | 22.07.2026 |

Chairman
Local Authority Procurement Committee,
Valikamam South west Pradeshiya Sabha,
Manipay.
21.05.2026.




## சாதனை மாணவிகள் முல்லையில் கௌரவிப்பு

முல்லைத்தீவு, மே 21

முல்லைத்தீவு மாவட்டத்தில் 2025ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரத்தில் உயிரியல் பிரிவில் முதலாம் மற்றும் இரண்டாம் இடங்களைப் பெற்று மாவட்டத்துக்கு பெருமைசேர்த்த மிஸ்ராஜ் நிடா பாத்திமா, பகீரதன் லாசன்ஜா ஆகியோர் அண்மையில் கௌரவிக்கப்பட்டனர்.

முல்லைத்தீவு மாவட்டச் செயலர் தலைமையில் பல்துறைப் பெண் சாதனையாளர்களுக்கு அரியாத்தை விருது மற்றும் பாராட்டுதல்கள் வழங்கிக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

இதன்போதே குறித்த இரு மாணவிகள் கௌரவிக்கப்பட்டதுடன் அவர்களின் படிப்புக்காக ஒரு தொகை பணமும் கையளிக்கப்பட்டது.

(ச-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு வாழ் பெற்றோரின் பிள்ளைகளுக்குக் கொடுப்பனவு

கொழும்பு, மே 21

வெளிநாடுகளில் பணிபுரியும் பெற்றோரின் பிள்ளைகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கில், பகல்நேர பராமரிப்பு நிலையங்களில் தங்கியிருக்கும் 2 முதல் 13 வயதுக்கு இடைப்பட்ட பிள்ளைகளுக்கு மாதமொன்றுக்கு 10,000 ரூபா கொடுப்பனவை வழங்கத் தீர்மானித்துள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

பெண்கள் மற்றும் சிறுவர் விவகாரங்கள் பற்றிய நாடாளுமன்ற ஆலோசனைக் குழுவின் கூட்டத்தில் கலந்துகொண்ட போதே வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியக அதிகாரிகள் இதனைத் தெரிவித்தனர்.

சிறு பிள்ளைகளைக் கொண்ட தாய்மார்கள் மற்றும் பெற்றோர் வாழ்வாதாரத்துக்காக வெளிநாடுகளுக்குச் செல்வதால், பிள்ளைகளின் பாதுகாப்பு கேள்விக்குறியாவதுடன் சமூகத்தில் பல்வேறு துஷ்பிரயோகப் பிரச்சினைகளும் எழுகின்றன.

இதனைக் கருத்திற்கொண்டே இந்தக் கொடுப்பனவுத் திட்டம் ஆரம்பிக்கப்படுகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)


## 8ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்
13
09
1947



மறைவு
20
05
2018

**அமரர். சின்னத்தம்பி பொன்னம்பலம்**
(மகாலிங்கம்)
(கார் உரிமையாளர் சுன்னாகம் பஸ்தரிப்பு நிலையம்)
திதி : பூர்வபக்க ஷஷ்டி

எட்டு ஆண்டுகள் கடந்து போனாலும்
ஒரு யுகமே ஓடி முடிந்தாலும்
ஓயவில்லை கண்கள் மட்டும்
ஒவ்வொரு நாளும் நீர் சொரிந்து
ஆலமரம் சாய்ந்தாலும் அடிவிழுது
தழைத் தோங்கும் போல்
நீ பிரிந்தாலும் உன்விழுதாய்
நாம் வளர்வோம்
உருவமாய் காத்த நீ அருவமாய்க் காப்பாய் என
ஆண்டவன் கழல் கூட எட்டாம் ஆண்டு
தவிர்த்து இருந்தோம்.
உந்தன் நிழல் தனில் எப்போதும் நாம்
வளர்வோம் பெரும் துணையாய்.

விதுஜா கூல் ஸ்பொட்
7ம் கட்டை, கே.கே.றோட்,
மல்லாகம்.

குடும்பத்தினர்
ஏழாலை மேற்கு, சுன்னாகம்.



## மரண அறிவித்தல்

தோற்றம்
05
–
04
–
1949



மறைவு
20
–
05
–
2026

ஆவரங்காலை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட

**திரு. இளையதம்பி மயில்வாகனம்**

அவர்கள் 20.05.2026 (புதன்கிழமை) அன்று காலமானார். இவர் காலஞ்சென்ற இளையதம்பி வள்ளியம்மை தம்பதிகளின் மகனும், காலஞ்சென்ற சுந்தரம் செல்லம்மா தம்பதிகளின் மருமகனும், சௌந்தர லக்ஷ்மி (ரூத்) அவர்களின் அன்புக் கணவரும், கிருஷியா, கிறேஷியன் (சட்டத்தரணி), கிறிஸ்டீவன் ஆகியோரின் அன்பு தந்தையும், அன்புவதனியின் (சட்டத்தரணி) மாமனாரும், அபிஹேல், அபினவ் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 21.05.2026 அன்று காலை 9மணிமுதல் மாலை 4 மணி வரை ஈசன்ஸ் மலர்ச்சாலை இல 148 பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மறுநாள் 22.05.2026 அன்று அன்னாரின் கொழும்பு இல்லத்தில் (25-1/1, அலெக்சான்ரா வீதி, வெள்ளவத்தை) காலை 9மணிமுதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பகல் 1.30 மணியளவில் இறுதிப் பிரார்த்தனைகள் இடம்பெற்று கல்கிஸ்சை பொது மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும் என்பதை ஆழ்ந்த கவலையுடன் அறியத்தருகின்றோம்.

No.25 1/1 Alexandra Road,
Wellawatte, Colombo - 06

தகவல்
0774372004 - (மகன் கிறேஷியன் - சட்டத்தரணி)
0778768181 - (மகள் கிருஷியா)


## மஹோற்சவம்

அளவெட்டி கும்பளாவளைப் பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் இன்று வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை சப்பறத்திருவிழாவும், 30ஆம் திகதி சனிக்கிழமை தேர் உற்சவமும், 31ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்த உற்சவமும் எதிர்வரும் ஜுன் மாதம் 1ஆம் திகதி திங்கட்கிழமை பூங்காவன உற்சவமும் இடம்பெறுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-41-63)

# வதிரிபீட விநாயகருக்கு இன்று கொடியேற்றம்!

கொழும்புத்துறை வதிரீபீட விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் இன்று வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 25ஆம் திகதி இரவு 7 மணிக்கு மஞ்சத் திருவிழாவும் 28ஆம் திகதி வியாழக்கிழமை சப்பறத் திருவிழாவும் 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்குத் தேர்த்திருவிழாவும் 30ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (ச-17)


**வேலையாள் தேவை**

யாழ்ப்பாணத்தில் இயங்கும் முதியோர் நோயாளர் பராமரிப்பு நிலையத்திற்கு குடும்ப பொறுப்பற்ற ஆண்/ பெண் தேவை. சகல வசதிகளும் செய்து தரப்படும்.
தொடர்பு: 0777 126859/60



## மரண அறிவித்தல்

தோற்றம்
28
.
05
.
1928



மறைவு
20
.
05
.
2026

**திருமதி கணபதிப்பிள்ளை பாக்கியம்**

மட்டக்களப்பு கல்முனையை பிறப்பிடமாகவும் நிரந்தர முகவரி 127, ஸ்ரான்லி வீதி, தற்காலிக முகவரி 108 அம்பலவாணர் வீதி, அத்தியடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கணபதிப்பிள்ளை பாக்கியம் அவர்கள் நேற்று (20.05.2026) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா பிள்ளையம்மா தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற இளையதம்பி சின்னம்மா தம்பதியரின் பாசமிக மருமகளும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்வர்களான சீனிப்பிள்ளை, சின்னப்பிள்ளை, தங்கம்மா, வள்ளியம்மா, தெய்வானை ஆகியோரின் அருமைச் சகோதரியும், பற்குணநாதன் (சின்னத்தம்பி), அழகேஸ்வரி (மணி), சாரதாம்பிகை (சாரதா), ரவீந்திரநாதன் (ரவி), கணேசநாதன் (பாபு), பத்மா (ராணி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற தெய்வகுமாரி, காலஞ்சென்ற சபாரெத்தினம், தில்லைச்சிவம், சங்கீதா (கீதா) ஆகியோரின் அன்பு மாமியாரும், சுகிர்தன் (சுகி), சாந்தா (சுபா), பாலேந்திரா (பாலா), கோபிகிருஷ்ணா (கோபி), நாகதர்சினி, நீரோஜினி (நந்தினி), ஶ்ரீதரன், மதன்குமார் (மதன்), லவன், துளசி, சுபதா, விதுலன், காவியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், டேனுகா, தக்ஷிகா, பானுஜா, தனுஷிகன் ஆகியோரின் அருமைப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.05.2026) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

077 2788 124 மகன்
077 6592 066 மகன்
076 9210 995 பேர்த்தி
077 8737 087 பேர்த்தி

தகவல்:
மகன் க.கணேசநாதன்
(பாபு)


Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

# தேசிய அரசுக்கான அழைப்பு இன்னும் 4 மாதங்களில் வரும்!



## ஐ.ம.சக்தி தெரிவிப்பு

கொழும்பு, மே 21

நாடு தற்போது எதிர்கொண்டுள்ள கடுமையான பொருளாதார நெருக்கடி காரணமாக, இன்னும் நான்கு மாத காலத்திற்குள் ஒரு 'தேசிய அரசாங்கத்தை' அமைப்பதற்கான அழைப்பை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க விடுக்கக்கூடும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையில் அவர் மேலும் கூறியதாவது:-

இந்த அரசாங்கம் கடுமையான நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது. கட்டணங்கள் செலுத்தப்படுவதில்லை. கடைசியில் கடன்சுமைதான் அதிகரிக்கப் போகின்றது.

பொருளாதாரம் தொடர்பில் மத்திய வங்கி ஆளுநர் வெளியிட்டுள்ள அறிவிப்பும் நிச்சயமற்ற தன்மையை புலப்படுத்துகின்றது. கடன் வாங்க மாட்டோம் எனக் கூறி அரியணை ஏறியவர்கள் கடன்களை வாங்கி வருகின்றனர். டொலர் பெறுமதி அதிகரித்துவருகின்றது. எதிர்காலத்தில் மேலும் எகிறும். எனவே, தேசிய அரசமைக்க வருமாறு இன்னும் 4 மாதங்களில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அழைப்பு விடுப்பார்.

நாட்டை மீண்டும் வங்குரோத்து அடைய வைப்பதற்கு இடமளிக்க முடியாது. நாட்டை நாம் பாதுகாக்க வேண்டும். அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால் ஆபத்தே ஏற்படும் - என்றார். (ச-44)



# கடமைக்கு நடத்தப்பட்ட முப்படையினர் தினம்!

## தயாசிறி சாடல்

கொழும்பு, மே 21

அரசாங்கம் ஏதோ ஒரு கடமைக்காகச் செய்ய வேண்டும் என்ற நோக்கிலேயே இராணுவ வீரர்கள் தினத்தைக் கொண்டாடுகிறதே தவிர, அதில் உண்மையான மதிப்பளிப்புத் தெரியவில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

அரசாங்கத்திற்கு எதிராக ஆயுதம் ஏந்திப் போராடியவர்கள் எவராக இருந்தாலும் அவர்கள் பயங்கரவாதிகளாகவே கருதப்படுவார்கள். இதில் தற்போதைய ஆளுங்கட்சியின் பின்னணியான மக்கள் விடுதலை முன்னணியை மாத்திரம் நாம் தவிர்த்துவிடமுடியாது. அவர்களும் கடந்த காலத்தில் அரசாங்கத்துக்கு எதிராக ஆயுதம் ஏந்தி, இந்த நாட்டின் ஏழை, அப்பாவி மக்களைக் கொன்று அழித்த பயங்கரவாதிகள் தான். யுத்தம் காரணமாகத் தமிழ் மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டார்கள், கொல்லப்பட்டார்கள். 1971 ஆம் ஆண்டு மற்றும் 1988, 1989 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் தெற்கில் இடம்பெற்ற கிளர்ச்சிச் சம்பவங்கள் மிகவும் கவலைக்குரியவை. தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு எவ்வித முரண்பாடுகளுமின்றித் தீர்வு காணப்பட வேண்டும். யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவிற்கோ அல்லது போரை முன்னின்று வழிநடத்திய முன்னாள் இராணுவ உயர் அதிகாரிகளுக்கோ இம்முறை தேசிய இராணுவ வீரர்கள் தின நிகழ்வில் கலந்து கொள்ள அழைப்பு விடுக்கப்படவில்லை. - என்றார். (ச-இ)



# விமல் வீரவன்ஸ வெத்து வேட்டு!

## அமைச்சர் விஜித தெரிவிப்பு

கொழும்பு, மே 21

அரசியலில் வெத்து வேட்டாக உள்ளவர்கள் தம்மை காட்போட் வீரர்களாக காண்பித்துக்கொள்வதற்கு முற்படுகின்றனர். அஞ்சலி செலுத்துவதற்கும், ஊடகங்களுக்காக கண்காட்சி நடத்துவதற்கும் இடையில் வேறுபாடு உள்ளது என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நடைபெற்றபோது விமல் வீரவன்ஸ விவகாரம் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

விமல் வீரவன்ஸ பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்துள்ளார். அதுதொடர்பில் சட்டநடவடிக்கை எடுக்கப்படும். நீதிமன்றம் ஊடாக உரிய நடவடிக்கை முன்னெடுக்கப்படும்.

அஞ்சலி செலுத்துவதற்கும், குழப்பம் விளைவித்து ஊடக பிரசாரம் தேடுவதற்கும் இடையில் வித்தியாசம் உள்ளது எனவும் அமைச்சர் குறிப்பிட்டார். (ச-44)

# 900 மில்லியன் டொலர் விரைவில் இலங்கைக்கு

## அமைச்சர் விஜித தெரிவிப்பு

உலக யுத்தச் சூழல் உள்ளிட்ட வெளிப்புறக் காரணிகளாலேயே நாட்டின் பொருளாதாரத்தில் தற்காலிக ஸ்திரமற்ற தன்மை ஏற்பட்டுள்ளது. எனினும், சர்வதேச நாணயநிதியம் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றின் ஊடாக விரைவில் சுமார் 900 மில்லியன் டொலர் நாட்டுக்குள் வரவுள்ளது. இதனூடாக தற்காலிக நெருக்கடியை வெற்றிகரமாக முகாமைத்துவம் செய்யமுடியும் என அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு கொழும்பிலுள்ள அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற போதே அவர் இதனைத் தெரிவித்தார்.


அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

தற்போது நிலவும் பொருளாதார ஸ்திரமற்ற தன்மைக்கு உலக யுத்த நிலைமை உள்ளிட்ட வெளிப்புற உலகளாவிய காரணிகளே முதன்மைக் காரணமாகும். மாறாக, எமது அரசாங்கத்தின் உள்ளகக் கொள்கைக் குறைபாடுகள் எவையும் இதற்குக் காரணமல்ல.

சர்வதேசப் பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்வதற்காக அரசாங்கம் ஏற்கனவே சில துரிதமான தீர்மானங்களை எடுத்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தால் விரைவில் அடுத்த தவணையாக 700 மில்லியன் டொலர் நிதியுதவி கிடைக்கவுள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கி மேலதிக ஆதரவாகப் புதிய கடனுதவியின் கீழ் 200 மில்லியன் டொலரை வழங்குவதாக உறுதியளித்துள்ளது.

ஒட்டுமொத்தமாக 900 மில்லியன் அமெரிக்க டொலர் மிகக் குறுகிய காலப்பகுதிக்குள் நாட்டுக்குள் வரவுள்ளதால், தற்காலிகமாக உயர்ந்து வரும் டொலரின் மதிப்பை நிலையான ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும் - என்றார். (ச-இ)



# பயங்கரவாதத்துக்கு எதிராகவே இறுதிப்போர் முன்னெடுக்கப்பட்டது

## மஹிந்த சமாளிப்பு

கொழும்பு, மே 21

நாம் போரிட்டது தமிழ் மக்களுக்கு எதிராக அல்ல, பயங்கரவாதத்துக்கு எதிராகவே. பயங்கரவாதத்திலிருந்து நாட்டை மீட்டோம். நம்மால் அதிகமாக மீட்கப்பட்டதும் தமிழ் மக்களே ஆவர் என்று மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார். 2009 ஆம் ஆண்டுயுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட தினத்தை முன்னிட்டு அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

என்னை ஒரு இனவாதியாகச் சித்தரித்துச் சில தரப்பினர் அரசியல் இலாபம் பெற முயல்வது வருத்தத்துக்குரியது. நான் ஒரு பெருமைமிக்க சிங்கள பௌத்தன் என்று கூறுவதற்குத் தயங்கமாட்டேன்.

ஆனால், வடக்கையும் தெற்கையும் இணைத்து 24 வருடங்களுக்குப் பின் யாழ்ப்பாணத்துக்கான 'யாழ் தேவி' புகையிரதப் பாதையைத் திறந்து முதலாம் பயணியாகச் சென்றது இதே மஹிந்த ராஜபக்சதான். காலங்கள் கடந்தாலும் பிரிவினை வாதக் குழுக்கள் வேறு வடிவங்களில் நாட்டின் ஒற்றையாட்சிக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தலாம். எனவே தென்னிலங்கை மக்கள் எப்போதும் விழிப்புடன் இருக்க வேண்டும் - என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விருதுகளுக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், மே 21

தென்மராட்சி பிரதேச செயலகத்தின் இவ்வருடத்துக்கான வருடாந்தப் பண்பாட்டு விழாவை முன்னிட்டு, பிரதேசத்தைச் சேர்ந்த மூத்த மற்றும் இளம் கலைஞர்களைக் கௌரவித்து விருதுகளை வழங்குவதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. தென்மராட்சி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் நீண்டகாலமாகக் கலைத் துறையின் பல்வேறு பிரிவுகளிலும் பங்காற்றி வரும் கலைஞர்களுக்குப் பின்வரும் இரு பிரிவுகளின் கீழ் விருதுகள் வழங்கப்படவுள்ளன. அதன்படி கலைத்துறையில் நீண்டகாலம் பணியாற்றிய, 50 வயதுக்கு மேற்பட்ட மூத்த கலைஞர்கள் 'கலைசாகரம்' விருதுக்கு விண்ணப்பிக்கலாம்.

கலைத்துறையில் தங்களின் திறமைகளை வெளிப்படுத்தி வரும் 40 வயதுக்கு உட்பட்ட இளம் திறமையாளர்கள் 'இளங்கலைஞர்' விருதுக்கு விண்ணப்பிக்கலாம். தகுதியுடைய கலைஞர்கள் தென்மராட்சி பிரதேச செயலகத்தின் கலாசார அலகிற்கு நேரில் சென்று உரிய விண்ணப்பப் படிவங்களைப்பெற்று மே 31 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலகத்தில் ஒப்படைக்க வேண்டும் என்று தென்மராட்சி பிரதேச செயலாளர் எவ். சீ. சத்தியசோதி தெரிவித்துள்ளார். (ச-9)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



கடந்த 21.04.2026 செவ்வாய்க்கிழமை
சிவபதமடைந்த அன்புக் கணவர்

**அமரர் குணரட்ணம் கார்த்திகன்**

(தொழிற்பயிற்சி அதிகாரசபை உத்தியோகத்தர்)

உறவுகள் தானுமாய் உருவாகி
பிரிவுகள் வந்தால் பேசுவதுமாகி
தளராது என்றும் உங்களின் பாசம்
எந்நாளும் என் மனதில் நீங்கா
நினைவுகளுடன் வாழும்

அன்னாரின் நினைவாக இன்று (21.05.2026) வியாழக்கிழமை மு.ப 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று கொள்ளுமாறு அன்போடு கேட்டுக் கொள்கின்றோம்.


ஏழாலை தெற்கு,
களபாவோடை, சுன்னாகம்.

அன்பு மனைவி
கா.ஜெகதினி

(CS/61464) J-1

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
17 . 08 . 1936



இறப்பு
21 . 05 . 2024

**அமரர் கி.ஜேசுராஜன்**

(ஓய்வுநிலை ஆசிரியர் - சென் ஜேம்ஸ் மகா வித்தியாலயம்,
புனித வின்சன் டி போல் சபை மூத்த உறுப்பினர்,
புனித ஆசீர்வாதப்பர் பந்தி. நல்லூர்.)

ஐயா,நீங்கள் எங்கும் போகவில்லை,
எம் இதயத்தின் அமைதியான ஓரத்தில்
இன்னும் மெதுவாய் சிரித்துக்கொண்டே இருக்கின்றீர்கள்

துன்பம் தழுவிய நேரங்களிலும்
நீங்கள் தடம் மாறவில்லை
அறமே உம் அடிச்சுவடு,
அறமே உம் உயிர்மூச்சு.

"இறைவழியே உயர்ந்தது" என்று
உம் வாழ்வே பாடமாகியது
அந்த நேரான பாதையில்
நீங்கள் நடந்ததோடு நிற்காமல்,
எங்களையும் நடத்திச் சென்றீர்கள்.

இன்று நீங்கள் கண்முன் இல்லையெனினும்,
நீங்கள் காட்டிய வழி இன்னும் உயிருடன் உள்ளது
நீங்கள் விட்டுச் சென்ற ஒளி இன்னும் அணையவில்லை,
அதன் வெளிச்சத்தில்தான்
நாங்கள் பயணிக்கிறோம்.

நீங்கள் இல்லாத வெற்றிடத்திலும் கூட
உங்கள் அன்பு எங்களை அணைத்துக்கொண்டே இருக்கிறது
நாம் இழுக்கும் ஒவ்வொரு மூச்சிலும்
நீங்கள் கலந்திருக்கின்றீர்கள்
எம் உயிரின் பிரியாத ஓர் அங்கமாக
அமைதியின் உலகில் நீங்கள் இளைப்பாறினாலும்,
ஆன்மா உயர்ந்த ஒளியில் ஒன்றியிருந்தாலும்,
எம் இதயங்களின் மௌனத்தில்
நீங்கள் என்றும் வாழ்கின்றீர்.

என்றும் உங்கள் நினைவுடன்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

(CS/61450) J-1

## பணியாளர்கள் தேவை

பிரபல வைத்தியசாலைக்கு ஆண், பெண் சுத்திகரிப்பு பணியாளர்கள் அவசரமாக தேவை.

அனுபவம் உள்ளவர்கள் முன்னுரிமை.

(சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்)

வயது எல்லை : 25 - 40 வரை

தொலைபேசி இலக்கம் : **076 047 7106**

(cs47560) (N.1)

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
26 . 10 . 1936



உதிர்வு
24 . 05 . 2023

எமது குடும்பத் தலைவர்

**அமரர் சங்கரப்பிள்ளை புவனேஸ்வரன்**

(வெண்சங்கு திரைப்பட கதாநாயகன்)

அவர்களின் 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி - 21.05.2026

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

55, மணல்தரை வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(cs.61480) (N -1)

நினைவுடன் வாழும்
குடும்பத்தினர்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
16 . 01 . 1986



மறைவு
21 . 04 . 2026

கடந்த 21.04.2026 செவ்வாய்க்கிழமை அன்று இறைபதமடைந்த

**அமரர் குணரட்ணம் கார்த்திகன்**

திதி: வளர்பிறை பஞ்சமி

நாள்கள் முப்பத்தொன்று சென்றாலும்
அகலவில்லை எங்கள் துயரம்
மனம் உங்களைத் தேடுகிறது
நினைவுகள் ரணங்களாய்க் கொல்கின்றன
குடும்பத்தின் ஒளிவிளக்காய் அனைவருடனும்
கலகலப்பாகப்பேசி மகிழ்விக்கும்
உங்கள் சிரித்தமுகம் கண்களில் தொடர்ச்சியாகத்
தோன்றிய வண்ணம் இருக்கின்றது
இவ்வளவு விரைவாக எங்களை
விட்டுப்பிரிவீர்கள் என்று கணப்பொழுதுகூட
நாங்கள் நினைக்கவில்லை
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


வரியப்புலம்,
சுன்னாகம்.

(CS/61472) J-1

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம்
08 . 03 . 1935

மறைவு
18 . 05 . 2026

### வல்லிபுரம் செல்வராசா

சண்டிலிப்பாய் மத்தியை பிறப்பிடமாக கொண்ட
எங்கள் அன்புத் தெய்வமே
மண்ணில் தோன்றிய நாள் முதல்
மாண்புறு வாழ்க்கை வாழ்ந்து
எம்மை எல்லாம் வாழவைத்த உத்தமரே!
நீங்கள் எம்மை விட்டு பிரிந்தாலும்
நாம் மண்ணில் மறையும் மட்டும்
உங்கள் அன்பான பண்பான உள்ளத்தை
மறக்க முடியாமல் வாடித் தவிக்கின்றோம் ஐயா.

பல ஆண்டுகளாக காளி அம்பாள் தர்மகர்த்தாவாக விளங்கி இன்று சிவப்பேறு அடைந்த அன்னாரின் ஆத்மா சாந்தியடைய காளி அம்பாளை பிரார்த்திக்கிறோம்.

ஓம் சாந்தி... சாந்தி... சாந்தி...

வ.ஸ்ரீதரன்

(CS 31838) A

## மரண அறிவித்தல்



தோற்றம்
22 . 02 . 1938

மறைவு
20 . 05 . 2026

### கந்தசாமி கோபாலகிருஷ்ணன்

(ஓய்வுபெற்ற அதிபர்)

துன்னாலையைப் பிறப்பிடமாகவும், தும்பளை, பருத்தித்துறையை வதிவிடமாகவும் கொண்ட திரு.கந்தசாமி கோபாலகிருஷ்ணன் அவர்கள் நேற்றையதினம் (20.05.2026) புதன்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி - தங்கமுத்து தம்பதியினரின் அன்பு புதல்வரும், காலஞ்சென்றவர்களான தியாகராஜா - தங்கமுத்து தம்பதியினரின் பாசமிகு மருமகனும், திருமதி.தவமணிதேவி அவர்களின் அன்புக் கணவரும், திருமதி.காஞ்சனா சிவகுமார் (லண்டன்), திரு.கோ.கிருஸ்ணகுமார் (சுகாதார அமைச்சு, வடமாகாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், திரு.சிவகுமார், திருமதி.செந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும், வருண், யுதிக்கா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்றைய தினம் (21.05.2026) வியாழக் கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப 10.00 மணியளவில் கோரியடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.


தும்பளை வீதி, தும்பளை,
பருத்தித்துறை.

தகவல்:
குடும்பத்தினர்.

(CR 47565)A

## மரண அறிவித்தல்

### அருணாசலம் விஜயராஜகிருஷ்ணன் (வண்டு/சிவா)



யோகபுரம் மல்லாவியை பிறப்பிடமாகவும் சுவிஸ் (Bern) பேர்ன்னை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட அருணாசலம் விஜயராஜகிருஷ்ணன் (வண்டு/சிவா) அவர்கள் கடந்த 18.05.2026 திங்கட்கிழமை சுவிஸில் காலமானார்.

அன்னார் காலம்சென்ற அருணாசலம் மற்றும் பாக்கியம் ஆகியோரின் பாசமிகு மகனும், காலம்சென்ற இராசலிங்கம் மற்றும் இந்திரநாயகி ஆகியோரின் அன்பு மருமகனும், சுகந்தினியின் பிரியமான கணவரும், அட்ஷரன், அருந்ததி ஆகியோரின் பாசமிகு தந்தையும், விஜயலஷ்சுமி, விஜயகிருஷணன், அமரர் விஜயகுமாரி, விஜயசறோஜா, விஜயபாலகிருஷணன் (பாலன்), விஜயலலிதா (ஆசிரியர்), விஜயநவகிருஷ்ணன் (நவா/இன்பன் மாஸ்ரர்) விஜயராணி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 21.05.2026 வியாழக்கிழமை மதியம் பி.ப 1:00 நடைபெற்று பூதவுடல் பி.ப 3:00 மணியளவில் தகனம் செய்யப்படும் என்ற தகவலை கனத்த இதயங்களுடனும் அனைவருக்கும் அறியத்தருகின்றோம். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்

பார்வையிடும் நேரம்-: 20.05.2026 புதன்கிழமை காலை 8:00- மாலை 8:00 மணிவரை.


இடம்- **Bremgarten Cemetery (Bremgartenfriedhof) Murtenstrasse 51, 3008 Bern.**

தகவல் :
குடும்பத்தினர்.

தொடர்புகளுக்கு:
அ.நவா (இன்பன்) -
சகோதரன் +44 7448 773941
வி.அக்சரன்- மகன் +41 76 640 63 54
குகன் நண்பன் +41 76 323 24 11

(CS 31833) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்து...

மானிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் நாளை, நாளைமறுதினம் என இரண்டு நாட்கள் கொண்டதாக இந்தப் போட்டி நடைபெறவுள்ளது. இந்தப் போட்டியைத் தொடர்ந்து இரண்டு பாடசாலைகளின் பழைய மாணவர்களுக்கு இடையிலான ரி20 கிரிக்கெட் போட்டி எதிர்வரும் 24ஆம் திகதி நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-20)

## அதிகாரப்...

உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு பொதுநூலகக் கட்டடத் தொகுதி ஜனாதிபதி அநுரவால் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. இதில் சட்டத்தரணி சுமந்திரன் கலந்துகொண்டு உரையாற்றினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எங்களுடைய தமிழரசுக் கட்சியின் ஆளுகைக்கு உட்பட்ட மட்டக்களப்பு மாநகர சபையின் பொது நூலகத்தைத் திறந்து வைப்பதற்கான அழைப்பு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு அனுப்பப்பட்டபோது அவர் இந்த நிகழ்வில் பங்குபற்ற வருவார் என்று நான் உறுதியாக நம்பினேன். அதற்குக் காரணம் உண்டு. அவர் அடிக்கடி யாழ்ப்பாணம் பொதுநூலகம் பற்றிப் பேசுபவர். யாழ்ப்பாணம் மக்கள் அந்த நூலகத்துக்குள் நுழையும்போது செருப்புகளைக் கழற்றி வைத்துவிட்டு உள்ளே நுழைவார்கள், நூலகத்தைக் கோயில்போல் பயன்படுத்துவார்கள் என்று அவர் அடிக்கடி கூறியிருக்கின்றார்.

அண்மையில் கூட கம்பன் விழாவில் ஆற்றிய உரையிலும் நூலகத்தையும் அதன் பெறுமதியையும் சிலாகித்து அவர் பேசியிருந்தார். ஆகையால் நூலகத் திறப்பு விழாவுக்கு எங்கள் அழைப்பை ஏற்று அவர் கட்டாயம் வருவார் என்று நாங்கள் நம்பினோம். அந்த அழைப்பை ஏற்றமைக்காக அவருக்கு நன்றி தெரிவிக்கின்றேன்.

இங்கு நாடாவை வெட்டி பொது நூலகத்தை திறந்து வைத்த ஜனாதிபதி, அது தொடர்பான நினைவுக்கல்லின் திரை நீக்கத்தை என்னைச் செய்யும்படி கேட்டுக்கொண்டார். ஒருவகையில் இது எங்கள் பணிகளை நாங்கள் எங்களுக்குள் பகிர்ந்து கொள்வதற்கான ஒரு முன்மாதிரி. நாட்டின் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வதற்கான ஒரு முன்னுதாரணம் என்று நான் நினைக்கிறேன்.

நேற்றுக் கூட ஜனாதிபதி உரையாற்றிய சமயம் இந்த நாட்டில் இனியொரு யுத்தம் நடைபெற அனுமதிக்க மாட்டேன் என்று உறுதி கூறியிருந்தார். அவர் ஆயுதம் ஏந்திப் போராடிய ஒரு குழுவில் இருந்து வந்தவர். நாங்கள் ஆயுதமேந்திப் போராடிய ஒரு மக்கள் கூட்டம். இருதரப்பினருமே இனியுத்தம் புரிவதில்லை, அதை வரவேற்பதில்லை என்ற தீர்மானத்துக்கு வந்திருக்கின்றோம். ஆனால், நாட்டில் இனி யுத்தம் ஏற்படக் கூடாது என்றால், அதற்கு அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு செய்யப்பட வேண்டும். அதற்கான அடையாளமாகவே இன்று பொது நூலகத்தை நாடா வெட்டி திறந்து வைப்பதையும் அதையொட்டிய நினைவுக்கல்லை திரை நீக்கம் செய்து வைக்கின்ற விடயத்தையும் நாங்கள் பகிர்ந்து கொண்டோம். அந்த அடிப்படையில் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு செய்யப்பட வேண்டிய அவசியத்தை நான் ஜனாதிபதிக்கு ஞாபகமூட்ட விரும்புகின்றேன்' - என்றார்.

(அ-ம-26)

## அபகரிக்கப்பட்ட...

மே மாதம் 11ஆம் திகதிக்குள் அகற்றுமாறும், இல்லையேல் பிரதேசசபை அந்த எல்லையை அகற்றும் என்றும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை தவிசாளர் சோமசுந்தரம் சுகிர்தனால் தையிட்டி திஸ்ஸ விகாராதிபதி ஜிந்தோட்ட நந்தாராம தேரருக்கு கடிதம் அனுப்பப்பட்டது.

பிரதேசசபையின் நடவடிக்கைக்கு எதிராக, தையிட்டி விகாராதிபதி பலாலி பொலிஸாரிடம் முறைப்பாடு வழங்கிய நிலையில், அந்த முறைப்பாட்டின் அடிப்படையில் மல்லாகம் பொலிஸார் வழக்குத் தொடர்ந்திருந்தனர். இந்த வழக்கு கடந்த 11ஆம் திகதி விசாரணைக்கு எடுக்கப்பட்டது. பொலிஸார் கோரியதைப் போன்ற தடைக்கட்டளை எதையும் நீதிமன்றம் வழங்காத போதிலும், இன்றையதினம் வழக்கின் கட்டளை வழங்கப்படும் என்று தெரிவித்திருந்தது. இதன்படி வழக்கு இன்றையதினம் கட்டளைக்காக எடுக்கப்படவுள்ளது. (அ-ம-26)

## மே 18ஆம்...

இறுதிப்போரில் மக்கள் உயிரிழந்தனர். உயிரிழந்த மக்கள் தொடர்பில் எமக்குக் கவலையுள்ளது. எனவே, நினைவேந்தலை முன்னெடுப்பதற்கு அவர்களுக்கு உள்ள உரிமையை நாங்கள் மதிக்கின்றோம். ஆனால் வடக்கிலும் ஏனைய இடங்களிலும் தமிழீழப் படத்துடனும், தமிழீழக் கொடியுடனும்தான் நினைவேந்தல் இடம்பெற்றுள்ளது.

முப்படையினர் தமது உயிரை தியாகம் செய்து பாதுகாத்த நாட்டில் இவ்வாறு நினைவேந்தலை நடத்த அனுமதிக்கக் கூடாது. வடக்கிலிருந்து வந்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களில் கணிசமானவர்கள் இனவாதம் பேசுகின்றனர். இனவாதத்தை வைத்துத்தான் அவர்கள் நாடாளுமன்றத்துக்கு தெரிவானார்கள். போர்வெற்றி நாளை இனப்படுகொலை நாளாக அறிவிக்க வேண்டும் என்பதே அவர்களின் நிலைப்பாடு. அதை நாங்கள் எக்காலத்திலும் ஏற்கமாட்டோம் - என்றார். (அ-ம-இ)

## வங்காள...

வித்தார். இதுதொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

முன்னரே கணித்தவாறு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை தென்மேற்குப் பருவக்காற்றின்உடைவுநிகழ்ந்துள்ளது. இதை உலகின் பல முன்னணி வானிலை முன்னறிவுப்புத் தளங்களும் உறுதி செய்துள்ளன. எதிர்வரும் 22ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் தென்மேற்குப் பருவக்காற்று மழை இலங்கையின் தெற்கு, சப்ரகமுவ, மேற்கு மற்றும் வடமேற்கு மாகாணங்களில் செறிவடையத் தொடங்கும். தொடர்ச்சியாகச் சில நாள்களுக்கு இந்தப் பிரதேசங்களில் மழை கிடைக்கும் - என்றுள்ளது. (அ-ம-66)

## விரிவுரையாளர்...

கொலை செய்யப்பட்டார் என சட்ட மருத்துவ அதிகாரியின் அறிக்கையில் உறுதி செய்யப்பட்டதாக பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

வழக்கின் மரண விசாரணை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நீதிவான் எஸ்.லெனின்குமார் முன்னிலையில் நேற்று நடைபெற்றது. மரண விசாரணையின்போது விரிவுரையாளரின் மகனும் பொலிஸாரும் சாட்சியம் வழங்கினர். இதன்போது சாட்சியமளித்த பொலிஸார், விரிவுரையாளர் தயாளினி திலீபன் கழுத்து நெரிக்கப்பட்டே கொலை செய்யப்பட்டார் என்று சட்ட மருத்துவ அதிகாரியின் அறிக்கையில் உறுதிசெய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்தனர்.

இருவரது மரண விசாரணைகளுக்கு பின்னர் வழக்கை எதிர்வரும் ஜூன் மாதம் 3ஆம் திகதிக்கு தவணையிட்ட நீதிவான், கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் உள்ள சிரேஷ்ட விரிவுரையாளரின் மருமகன் மற்றும் மகள் ஆகியோரின் விளக்கமறியல் காலத்தை அன்றையதினம் வரை நீடித்தும் உத்தரவிட்டார்.

வழக்கு விசாரணைகளின் போது பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனின் வழிகாட்டலில் சட்டத்தரணி பெனிஸ்லஸ் துஷானும், கொல்லப்பட்டவரின் மருமகனான முதலாவது சந்தேகநபர் சார்பில் சட்டத்தரணி சர்மினி, கொல்லப்பட்டவரின் மகளான இரண்டாவது சந்தேகநபரின் சார்பில் சட்டத்தரணி சமந்த அத்துக்கோரளவின் வழிகாட்டலில் மற்றொரு சட்டத்தரணியும் முன்னிலையாகினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

(அ-ம-26)

## சிவகங்கை...

இடம்பெற்றுவரும் ஒரேயொரு பயணிகள் கப்பற்சேவையாக சிவகங்கை உள்ளது. வடமாகாணத்தின் காங்கேசன்துறை துறைமுகத்துக்கும் தமிழ்நாட்டின் நாகபட்டினம் துறைமுகத்துக்கும் இடையிலான இந்தச் சேவை இயந்திரக் கோளாறு காரணமாக பல தடவைகள் தடைப்பட்டுள்ளது. இந்த மாதத்தின் முதலாவது வாரத்தில் அடுத்தடுத்து இரண்டு தடவைகள் பயணிகளை ஏற்றியவாறு நடுக்கடலில் பழுதடைந்த நிலையில், பெரும் இழுபறிக்கு மத்தியிலேயே பயணிகள் கரை சேர்க்கப்பட்டிருந்தனர். இதையடுத்து கடந்த 8ஆம் திகதியில் இருந்து அந்தக் கப்பல் மீளவும் சேவையில் ஈடுபடவில்லை.

இந்நிலையில் நேற்று 20ஆம் திகதி நாகபட்டினத்தில் இருந்து காங்கேசந்துறை நோக்கி சிவகங்கை கப்பல் சேவையில் ஈடுபடும் என அறிவிக்கப்பட்ட போதிலும், அந்தச் சேவை இடம்பெறவில்லை. திருத்தற் பணிகளின் பின்னர் இடம்பெற்ற சோதனை ஓட்டம் வெற்றிபெறாதமை காரணமாகவே சேவை இடம்பெறவில்லை எனத் தெரியவருகிறது. இதையடுத்தே சிவகங்கை பயணிகள் கப்பல் சேவை மீண்டும் கேள்விக்குறியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-100)

## சிறைக்குள்...

உயிர்த்தஞாயிறுத் தாக்குதல் தொடர்பானவழக்கு கொழும்பு கோட்டைநீதிவான் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்காக எடுக்கப்பட்டது. இதன்போதே சிறையில் வைத்து பிள்ளையானை ராஜபக்சக்கள் சந்தித்துக் கலந்துரையாடல் நடத்திய விடயம் தொடர்பில் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

சிறையில் இருந்த பிள்ளையானைச் சந்தித்த மஹிந்த ராஜபக்ச, பஸில் ராஜபக்ச, நாமல் ராஜபக்ச ஆகியோர், முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பதவியேற்று ஒரு வாரத்துக்குள் அவரை வெளியில் எடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற உத்தரவாதத்தை அவருக்கு வழங்கினார்கள். பிள்ளையானின் முன்னாள் தனிப்பட்ட செயலாளரான அசாத் மௌலானாவிடமிருந்து பெறப்பட்ட வாக்குமூலங்களின் அடிப்படையிலேயே இந்த அதிர்ச்சித் தகவல்கள் தெரியவந்துள்ளன என்றும் சட்டமா அதிபர் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.

தற்போது பிரான்ஸில் வசித்து வரும் அசாத் மௌலானாவிடம், பிரான்ஸில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் வைத்து புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் அண்மையில் வாக்குமூலம் ஒன்றைப் பதிவு செய்திருந்தனர். அந்த வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பில் தற்போது மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## இனப்...

றன. எமது மக்களின் வலியும், வேதனையும் அவர்களுக்குத் தெரியுமா?

குழந்தைக்குப் பால் கொடுத்துக் கொண்டிருந்த தாயொருவர் குண்டுத்தாக்குதலில் கொல்லப்பட்டார். விண்ணைத் தொடும் அளவுக்கு அழுகுரல் ஒலித்தது. எனினும், அந்தக் கடவுள்கூட எமக்கு இரங்கவில்லை. ஈழத்தில் இடம்பெற்ற இனப்படுகொலை தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபைவரை சென்று முறையிட்டோம். எனினும் இன்றளவும் எமக்குத் தீர்வு கிடைக்கவில்லை - என்றார். (அ-ம-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாய உயர்தேசிய டிப்ளோமா விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

கொழும்பு, மே 21
விவசாயத் திணைக்களத்தின் இலங்கை விவசாயக் கல்லூரிகளில் விவசாய உயர்தேசிய டிப்ளோமா கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தேசிய தொழிற்தகைமை மட்டம் 6 இற்குரிய இந்தக் கற்கைநெறியை தொடரவிரும்பும் மாணவர்கள் க.பொ.த. சாதாரண தர பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் 6 பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் தமிழ் அல்லது சிங்களம் மற்றும் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் உள்ளடங்கலாக நான்கு பாடங்களில் திறமை சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் மேற்குறிப்பிட்ட இருதடவைகளில் அல்லது அதற்கு மேற்பட்ட தடவைகளிலேனும் ஆங்கில பாடத்தில் சாதாரண சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன் க.பொ.த. உயர்தரத்தில் உயிரியல் பிரிவில் தோற்றி உயிரியல் அல்லது விவசாயம் மற்றும் பௌதீகவியல் இரசாவியல் ஆகிய மூன்று பாடங்களிலும் ஒரே தடவையில் சாதாரண சித்தி பெற்றிருத்தல் வேண்டும். தொழில்நுட்பப் பிரிவில் தோற்றிய மாணவர்களெனில் உயிரியல் தொழில்நுட்பம் அல்லது பொறியியல் தொழில்நுட்பம் மற்றும் தொழில்நுட்பத் துறைக்கான விஞ்ஞானம், விவசாயம் ஆகிய பாடங்களில் ஒரேதடவையில் தோற்றி மூன்றுபாட சித்தி பெற்றிருத்தல் வேண்டும். விண்ணப்பதாரி இம்மாதம் 25 திகதியில் 18 வயதை பூர்த்தி செய்திருப்பதுடன் 25 வயதுக்கு மேற்படாதவராய் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்பாக நிகழ்நிலை முறை மூலம் விவசாயத் திணைக்களத்தின் www.doa.gv.lk என்ற இணையத்தளத்தினூடாக விண்ணப்பிப்பதுடன் விண்ணப்பப்படிவத்தின் அச்சுப்பிரதி எதிர்வரும் 29ஆம் திகதிக்கு முன்பாக யணிப்பாளர் (விரிவாக்கற் பிரிவு), விரிவாக்கற் பயற்சி நிலையம், விவசாயத் திணைக்களம், பேராதனை என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

விண்ணப்பப்படிவத்துடன் க.பொ.த. சாதாரணதர பரீட்சை மதிப்பெண் சான்றிதழின் நகல் பிரதி, க.பொ.த. உயர்தர பரீட்சை மதிப்பெண் சான்றிதழின் நகல் பிரதி, பிறப்புச் சான்றிதழின் நகல் பிரதி, தேசிய அடையாள அட்டையின் நகல் பிரதி இணைக்கப்படல் வேண்டும். அத்துடன், பரீட்சைக்கான கட்டணமாக ஆயிரத்து 300 ரூபாவ்வ மக்கள் வங்கி பேராதனை கிளையின் விவசாயத் திணைக்களத்தின் இலக்கம் 05710013902720 1 கொண்ட வருமான கணக்குக்கு வைப்பிலிட்டு விண்ணப்பதாரியின் பெயரில் பற்றுச்சீட்டைப் பெற்று அந்தப் பற்றுச்சீட்டும் இணைக்கப்படல் வேண்டும்.

இதுகுறித்த மேலதிக தகவல்களை ஏப்ரல் மாத 24ஆம் திகதிய வர்த்தமானிமூலம் பெற்றுக்கொள்ளமுடியும் அல்லது 081 238 8340 அல்லது 081 238 8341 என்ற தொலைபேசி இலக்கம் மூலம் தொடர்புகொண்டு அறியமுடியும். (ம)

## விபத்தில் இளைஞர் உயிரிழப்பு

கொழும்பு, மே 21
பொகவந்தலாவ பொலிஸ் நிலையத்தின் முன்பாக நிறுத்தப்பட்டிருந்த லொறியுடன் தனியார் பேருந்து மோதியதில், லொறியில் பயணித்த ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என பொகவந்தலாவ பொலிஸார் தெரிவித்தனர். உயிரிழந்தவர் பொகவந்தலாவயைச் சேர்ந்த 28 வயது இளைஞர் என்றும், விபத்தை ஏற்படுத்திய பேருந்துச் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர். (ஏ-இ)

## மாகாணத்...

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தால் நாட்டை ஆளமுடியவில்லை. பல்வேறு துறைகளிலும் தற்போதைய அரசாங்கம் தோல்வியடைந்துள்ளது. எனவே, மக்களின் நிலைப்பாடு என்னவென்பதை அறிவதற்கு ஏதுவாக மாகாணசபைத் தேர்தலை நடத்த வேண்டும். ஜனநாயகத்தை மதித்து நடக்குமாறு தற்போதைய அரசாங்கத்தைக் கோருகின்றோம் - என்றார். (அ-ம-இ)

**காணி விற்பனைக்கு**
இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் கோவிலுக்கு மிக அண்மையில் 1 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 075 289 6612
(CS 31838)A

# மரண அறிவித்தல்
## பரம்சோதி சுந்தரகுமாரி (ராசாத்தி)



காரைநகர் கோவளத்தை பிறப்பிடமாகவும், வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட பரம்சோதி சுந்தரகுமாரி (ராசாத்தி) அவர்கள் நேற்று (20.05.2026) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - மகாலட்சுமி தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா - தங்கமுத்து தம்பதியரின் பாசமிகு மருமகளும், பரம்சோதி அவர்களின் பாசமிகு மனைவியும், நாகரஞ்சனா, சோபனா, ஐங்கரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்றவர்களான சுந்தரலட்சுமி, தெய்வேந்திரம், இராஜேந்திரம், மற்றும் மகேந்திரம், காலஞ்சென்ற ஜெயலட்சுமி மற்றும் விஜயலட்சுமி, தனலட்சுமி, ஜெயகுமாரி ஆகியோரின் சகோதரியும், சிவபாலன், தயாபரன், ரஜித்தா ஆகியோரின் மாமியாரும், கம்சினி, கிரிஷாந்த், கிஸ்சோ, சேயாந், நிஸ்வின், சுபேக்கா, மவுன்ஸ்சா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.05.2026) வியாழக்கிழமை முற்பகல் 08.00 மணியளவில் வட்டுக்கோட்டையில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மூளாய், வித்தனை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தோற்றம் 22.02.1961 — மறைவு 20.05.2026

தகவல்:
குடும்பத்தினர்

(CS/61482) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media
இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.05.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.